
# குடும்ப நலச் செய்திக் கதிர்

மலர் - 11 இதழ் - 7

அக் - 1981


JL
y:52:5m211,N71
N81.11.7
159887

பர் 198 துன்மதி
ஐப்பசி
நாடு கு ம்பநலத்துறை வெளியீடு





# குடும்பநலச்
செய்திக்கதிர்



# குடும்ப நலப் பிரச்சாரமே நமது முக்கியப் பணியாகும்!

## பிரதமர் திருமதி இந்திராகாந்தி

(மத்திய நல்வாழ்வுக் குழு, மத்திய குடும்பநலத் திட்டக் குழு ஆகியவற்றின் கூட்டுக் கூட்டம் கடந்த ஜூன் 15—ஆம் நாள் புது டில்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டுக் கூட்டத்தை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் துவக்கி வைத்து ஆற்றிய ஆங்கிலப் பேருரையின் தமிழ் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது).

நல்வாழ்வு குறித்தும், சிறப்பாகக் குடும்ப நலத் திட்டம் பற்றியும் என்னுடைய கருத்துக்கள் எவை என்பதை நாடு நன்றாக அறியும். அந்தக் கருத்துக்களை ஏற்கனவே ஏற்றுக் கொண்டவர்கள் மத்தியில்—அவற்றை ஏற்கனவே நாட்டில் பரப்பிக் கொண்டிருப்பவர்களிடையே நாம் விவாதிக்க இருக்கின்றோம்.

இப்போது பெரும்பாலான மக்களைக் குடும்பநலத் திட்டத்துக்குச் சாதகமாக மட்டுமல்லாது, அடிப்படையான நல்வாழ்வுடன் வாழ்க்கை நடத்துவதற்குரிய முறைகளைப் பின்பற்றச் செய்வது எப்படி என்பதுதான் நம் முன்னுள்ள பெரிய கேள்வியாகும். எந்தவித ஆக்கப் பூர்வமான பணிக்கும் 'நல்வாழ்வு' என்பது தொடக்க நிலையாகும் என்பதில் ஐயப்பாடு இருப்பதற்கு இல்லை. ஒரு நாட்டினுடைய நல்வாழ்வு என்பது அந்த நாட்டில் உள்ள தனிப்பட்ட மக்களின் நல்வாழ்வைப் பொறுத்தே அமையும். நல்வாழ்வு இல்லாமல் நாம் எந்த ஒரு முனையிலும் வளர்ச்சி பெற இயலாது. எனவே மக்களுக்கு, நல்வாழ்வு வசதிகள் கிட்டச் செய்ய வேண்டியது அரசின் அடிப்படையான பொறுப்பாகும்.

### கி. பி. 2000க்குள்...........

இந்த மாநாட்டில் மிக முக்கியமாக விவாதிக்கப் பட இருப்பது ஒன்று உண்டு. உலக நல்வாழ்வு நிறுவனம் கி. பி. 2000—க்குள் அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வு கிட்டச் செய்ய வேண்டுமென ஒரு இலக்கை வெளியிட்டு இருக்கிறது. அந்த உலக அளவிலான திட்டம் தான் மிக முக்கியமான ஒன்றாக இங்கே விவாதிக்கப்பட இருக்கின்றது. 'கி. பி. 2000—க்குள் அனைவருக்கும் நல்வாழ்வு' என்பது அந்தக் குறிக்கோளாகும்.

நம் நாட்டு மக்கள் அனைவரிடையேயும் நல்வாழ்வு குறித்த ஒரு விழிப்புணர்ச்சியை உருவாக்குவது அல்லது வளர்ப்பது என்பதுதான் எனக்கு முதல் கடமையாகத் தெரிகிறது. பொறுப்புள்ள பணிகளிலே ஈடுபட்டிருப்பவர்களிடையே மட்டுமல்லாது, மருத்துவர்களிடையேயும் அத்தகைய நிலையை உருவாக்கவேண்டும், என விரும்புகிறேன். அமைச்சர் குறிப்பிட்டது போல திறமை மிக்க—பயிற்சி பெற்ற மருத்துவர்கள் வியாதிகளைக் குணமாக்க வெளியில் செல்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் அண்டை வீட்டார் வாழுகின்ற சுற்றுப்புறமும், நல்வாழ்வுடன் கூடிய வாழ்க்கையை நடத்துவதற்கு உகந்ததாக இருக்கிறதா? அல்லது அவர்கள் சந்திக்கின்ற மக்கள்—அவர்கள் சிகிச்சை அளிக்கின்ற நோயாளிகள் ஆகியோரின் சுற்றுப் புறச் சூழல் நல்வாழ்வு வாழத் தக்கதாக இருக்கிறதா என்பதை அறிவதற்குரிய விழிப்புணர்வு அவர்களிடையே இல்லை என்றே கருதுகிறேன். எனவே, இது குறித்து மக்கள் மத்தியில் நாடு தழுவிய இயக்கம் ஒன்றை நாம் உருவாக்கியாக வேண்டும்.

நல்வாழ்வு வாழ்வதற்கான எல்லா வசதிகளும் நமக்கு இருக்கிறது என்று நாம் பொதுவாகக் கருதுகின்றோம். ஆனால், மிகப் பெரும் அளவிலான நமது மக்கள் அவர்கள் செல்வந்தர்களாக இருந்தபோதிலும் அல்லது வசதி வாய்ப்புக்களை பெற்றவர்களாக இருந்த போதிலும், நல்வாழ்வு குறித்து எப்பொழுதும் கவனமாக இருப்பது இல்லை. நாட்டினுடைய பொதுவான வளர்ச்சித் திட்டங்களின் ஒருங்கிணைந்த திட்டமாக நல்வாழ்வுத் திட்டம் இருத்தல் வேண்டும். மனம், வளர்ச்சி, உடல் ஆகியவற்றுக்கு இடையே உள்ள நெருங்கிய தொடர்புகள் குறித்து நமது முன்னோர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

### நல்வாழ்வு :

ஒவ்வொன்றும் மற்றதைப் பிரதிபலிக்கின்றது—ஒவ்வொன்றும் மற்றதுடன் பின்னிப் பிணைந்திருக்கிறது. எனவே நல்வாழ்வுடன் கூடிய வாழ்க்கை நடத்த சரியான



159887

Y:52-5m21,6171
N81-11.7

266

சூழலையும், உடல் வளத்தையும் அதற்கு உகந்ததாக உருவாக்குவது அவசியமாகிறது. நான் சார்ந்திருக்கும் கட்சி தேசிய நல்வாழ்வுக் கொள்கை நிறைவேற்றத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது. தேசிய நல்வாழ்வுத் துறை அமைச்சகம் இந்தக் கொள்கையை இம்மாநாட்டில் விவாதிக்க வேண்டி மூன்று வரைவுகளைத் தயாரித்து அளிக்கிறது. அவற்றின் மேல் ஒளிவு மறைவின்றி—பயன் தரத்தக்க விவாதம் நடத்தப்பட்டு, இந்த முக்கியமான கொள்கை வரைவுகளுக்கு இறுதி வடிவம் தரப்படும் என்று நம்புகிறேன். 'நல் வாழ்வு' குறித்து நமது மனப்பான்மை மாறிட வேண்டும். நல் வாழ்வு என்பது அதிர்ஷ்டவசமாக அமைவது அல்ல—அல்லது வாய்ப்பாக கிட்டுவது அல்ல என்பதை ஒவ்வொருவரும் அறிந்தாக வேண்டும்.

ஒவ்வொருவரது வாழ்விலும் நல்வாழ்வை அமைத்துக் கொள்வதற்காக ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரும் உழைத்தாக வேண்டும். என்னுடைய சொந்த அறிவாற்றலையும், அனுபவத்தையும் வைத்து இதை என்னால் அறுதியிட்டுக் கூற முடியும். ஒவ்வொரு முறையும் என்னிடத்திலே வந்து, இத்தகைய கடினமான பொறுப்புக்களையெல்லாம், சிரமங்களையெல்லாம் தாங்கிக் கொண்டு எப்படிக் கடமைகளை நிறைவேற்றுகிறீர்கள்—எப்படி அனைத்தையும் தாங்கிக் கொள்கிறீர்கள் — அனைத்திற்கும் ஈடுகொடுத்து எப்படிப் பணிபுரிகிறீர்கள் என்று பலரும் கேட்கிறார்கள். இத்தகைய நிலையைத் தாங்கிக் கொள்வதற்குப் பல காலமாக—என் வாழ்நாள் முழுவதும் என்னை நான் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறேன். அதே நேரத்தில் தொடர்ந்து பணியாற்றவும் செய்வேன். இத்தகைய பணியில் ஈடுபடுவதை தவிர்த்து விட்டால் அது ஒருவருடைய திறமையை—ஆற்றலைப் பாதித்து விடும். உண்மையிலேயே எதிர்பாராத சூழ்நிலைகளில் நோய்கள் உடல் நலத்தைப் பாதித்து விடுகின்றன. ஒருவருக்கு 'நல்வாழ்வு' என்பது அவரது மனப் போக்கை—நல்ல பழக்க வழக்கங்களைப் பொறுத்தே அமைகிறது. அந்தப் பழக்க வழக்கங்கள் பெற்றோர்களாலும், ஆசிரியர்களாலும், மருத்துவர்களாலும் தான் மக்களிடையே உருவாக்கப்படுகின்றன. இந்தப் பெரும் பணி முழுக்க முழுக்க நம் மருத்துவர்களுடையது என விட்டு விட இயலாது, கல்வி, விவசாயம், தொழில்களைத் திட்டமிடுதல், விஞ்ஞானம், தொழில் நுட்பத் திட்டம் ஆகிய அனைத்துமே நல்வாழ்வு மிக்க ஒரு நாட்டை உருவாக்குவதற்கான மொத்தத் திட்டமாக அமைதல் வேண்டும். வறுமையும் நாட்டிலே நோய்கள் 'உருவர்வதற்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது. ஆனால் அதே நேரத்தில் வளர்ச்சியின் அறிகுறியான தொழில்களும் நான் முன் சொன்னதற்கு இணையாக, நோய்கள் பரவுவதற்கான காரணங்களாக அமைகின்றன.

## சைவமும், சத்துணவும்

காற்றும், தண்ணீரும், நச்சுத் தன்மை அடையாமல், இருப்பதற்காக நாம் சில நடவடிக்கைகளை எடுத்து இருக்கின்றோம். ஆனால் ஓசையினால் உண்டாகும் நச்சுத் தன்மையைத் தடுக்க நாம் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்காகவும் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம் என்று நான் கருதுகின்றேன். ஆனால் நல்வாழ்வு வாழ்வதற்கு உறுதுணையாக இருப்பவற்றுள் உணவு மிக அடிப்படையான ஒன்றாகும். நாம் அனைவரும் சத்துணவு பற்றிப் பேசுகின்றோம். நமது நாட்டில் சைவ உணவுக் கோட்பாடு பற்றி மிக அதிகமாகப் பேசப்பட்டும், நடைமுறையில் செயல்படுத்தப்பட்டும் வருகிறது. என்றாலும், நமது நாட்டு மக்கள் பசுமையான காய்கறிகளை உண்பது மிகமிகக் குறைவாக இருக்கிறது என்பது பற்றி நான் அண்மையில் படித்து அறிந்தேன். விலையுயர்ந்த காய்கறிகளில் தான் நமக்குத் தேவையான வைட்டமின்களும், பிற சத்துக்களும் இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

கிராமப்புறங்களிலும், மலைப்பகுதிகளிலும், அத்தகைய பசுமையான காய்கறிகள் ஏராளமாக விளைகின்றன. மக்கள் தொகை பெருகிக் கொண்டே போகுமேயானால் அவை அந்த அளவுக்கு ஏராளமாக உருவாக வாய்ப்பில்லை. ஆனால், இப்போது கிராமப் புறங்களிலும், மலைப்பகுதிகளிலும் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை நாம் சத்துணவுக் குறைபாட்டைப் போக்குவதற்காக பயன் படுத்திக் கொள்ள முடியும்.

குறிப்பாகக் குழந்தைகளுக்குத் தேவையான சத்துணவுத் தேவைகளை நிறைவு செய்வதற்காக அந்தப் பசுமையான காய்கறிகளை நாம் பயன் படுத்தலாம். அந்தந்த வட்டாரத்தில் எவை கிடைக்குமோ அவற்றை அடிப்படையாக வைத்துத் தான் நல்வாழ்வுத் திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும். நாட்டினுடைய ஒரு மூலையிலிருந்து, இன்னொரு மூலைக்கு வரவழைக்கப்பட வேண்டியவற்றை வைத்துக் கொண்டு நல்வாழ்வுத் திட்டத்தை வகுத்துச் செயல்படுத்தினால் அது பயன்தரத்தக்கதாக இராது.

குறிப்பிட்ட நோய்க்கான குறிப்பிட்ட சிகிச்சையைப் பற்றி நான் இங்கே குறிப்பிடவில்லை. நோய் வராமலிருப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும், அந்தந்தப் பகுதிகளில் உருவாகும் நோய்கள் பொதுவான பிணி, இவற்றைப் போக்க நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய சிறப்புக் கவனம் பற்றியும், குறிப்பாகக் குழந்தைகள் நலத்தைக் காப்பதற்காக நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நான் முன்பு கூறியிருப்பது போல, நோய் வராமலேயே தடுத்துக் காத்துக் கொள்வது தான்—வருமுன் காத்துக் கொள்வது தான் மிகச் சிறந்த சிகிச்சையாகும். போர் வராமலே தடுத்துக் கொள்வது என்பது ஒரு நாட்டுக்குக் கிட்டுகின்ற மிகப் பெரிய வெற்றி என்பது போல், நோய் வராமலே தடுத்துக் கொள்வது என்பது மனித வாழ்வில் பெறுகின்ற வெற்றியாகும். நமது நாட்டில் வசதி படைத்தவர்கள் கூடச் சரிவிகித உணவு உட்கொள்வது இல்லை. அவர்கள் பழக்கத்திலிருக்கும் உணவு முறை அவர்களது உடலுக்குத் தேவையான சத்துக்கள் அனைத்தையும் ஒரே சீராக வழங்குவது இல்லை. அதே நேரத்தில் சில சத்துக்கள் தேவைக்கு அதிகமாகவே அவர்களுக்குக் கிட்டுகின்றன. எனவே நம் உடலுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களையும் பெறுவதற்காக சரிவிகித உணவு உட்கொள்ள வேண்டுமென்றமனப்பான்மையைக் குழந்தைப் பருவம்முதலே, குழந்தைப் பள்ளிகளின் வாயிலாகவும்—பெற்ற தாய்களின் மூலமாகவும்—குழந்தைகள் நல நிலையங்கள் வழியாகவும் குழந்தைகளிடத்தில் உருவாக்க வேண்டும். நமது மருத்துவர்கள், அவர்களது பணி மிகமிக அதிகமாகத் தேவைபடுகின்ற கிராமப்புறங்கள், அல்லது மலைப் பகுதிகள் அல்லது வனப் பகுதிகள் ஆகியவற்றுக்குச் சென்று பணியாற்றத் தக்க வகையில், அவர்களை நாம் ஊக்கப்படுத்தியாக வேண்டும்.

## குழந்தைகளுக்கு முன் உதாரணமாக பெரியவர்கள் விளங்க வேண்டும்.

நான் முன்பு சொல்லியிருப்பது போல, இத்தகைய நிலைகளையெல்லாம் வளர்ப்பதற்கு கல்வி என்பது மிக மிக அடிப்படையான ஒன்றாக அமைகின்றது—உடல் நலம், தூய்மை, தனி மனிதன்—உடல் தூய்மை பேணல் சுற்றுபுறச் சுகாதாரம் ஆகியவற்றைக் காத்துக்கொள்வது எப்படி என்பது பற்றி குழந்தைகள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அந்த வகையில் பெரியவர்கள் அந்தக் குழந்தைகளுக்கு முன் உதாரணமாக விளங்க வேண்டும். நமது மருத்துவ மனைகள் இதற்காகப் பெரும் பணியாற்ற வேண்டும். பள்ளிப் பாடத் திட்டத்தில் நல்வாழ்வுத் திட்டத்தின் அடிப்படைக் கூறுகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் முதியோர் கல்வித் திட்டத்திலும், மற்ற கல்வித் திட்டங்களிலும் அது இடம் பெற்றாக வேண்டும்.

நமக்கு ஏற்படுகின்ற பல்வேறு வியாதிகள், உண்மையிலேயே ஏதோ ஒருவித கிருமியாலே ஏற்படுகின்றது என்ற போதிலும் கூட, சமூகப் பொருளாதார நிலைமைகளோடு இணைந்த அடிப்படைக் காரணங்களினால்தான் அந்த நோய்கள் பிறக்கின்றன. பொருளாதார வகையில் மிகப் பின் தங்கிய நாடுகள் மிக அதிகமான நல்வாழ்வுத் திட்டங்களை எதிர்நோக்கியுள்ளன என்றாலும், அதற்குத் தேவையான பல வாய்ப்புக்களும் உரிய பயிற்சி பெற்ற பணியாளர்களும், நிருவாகிகளும் அடங்கிய அமைப்புக்களும் இல்லாத காரணத்தில் அவர்கள் துன்புற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இந்நிலை வளர்ந்து விட்ட நாடுகள் அல்லது முன்னேறிய நாடுகளில் நல்வாழ்வுப் பிரச்சினைகள் இல்லை என்றும், அவை தங்களது மக்களின் நல்வாழ்வுப் பிரச்சினைகளைத் தீர்த்து விட்டன என்றும் பொருள் தராது. வசதிமிக்க நிலைமை அதற்கே உரிய நோய்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. வசதி மிக்க நாடுகளில் மருத்துவ சிகிச்சை என்பது பெரும் செலவினை ஏற்படுத்துவதாக இருக்கிறது. அந்த நாடுகளில் பெரும்பாலான மக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகள் இன்னும் கிட்டாது இருக்கின்றன. அங்கெல்லாம் ஏழை மருத்துவச் சிகிச்சை பெற்று வியாதியை வரவழிக்கின்றவர்களாக இருக்கின்றார்கள் என அறிகின்றோம்.

இந்தியாவில் இப்போது செலவழிப்பதைவிட இன்னும் பத்து மடங்கு அதிகமாக மருத்துவ சிகிச்சைக்காக செலவழிக்கப் பட்ட போதிலும் கூட நமது மக்களுக்குத் தேவைப்படுகின்ற அனைத்து மருத்துவ வசதிகளையும் நம்மாலே கொடுத்து விட முடியாது. ஆனால் தெய்வ தண்டனையால் உண்டாகும் என்று கருதப்பட்ட பழமையான நோய்களை அடியோடு ஒழித்துக் கட்டுவதில் நாம் முனைப்பாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

### அட்டையில்......

முதல், 4—ம் அட்டைகளில்: சென்னை இராசாசி மண்டபத்தில் நடைபெற்ற சட்டமன்றப் பேரவை—மேலவை உறுப்பினர்களின் முதலாவது மக்கள் தொகை மற்றும் வளர்ச்சிப் பணி மாநாட்டில் திரு. மதுரை முத்து, திரு. ஹாஜா ஷெரீப் திரு. தாமோதரன் ஆகியோர் தலைமையில் தனித்தனியே நடந்த குழுக்களின் விவாதம்.

இரண்டாம் மூன்றாம் அட்டைகளில்: மாநாட்டையொட்டி அமைக்கப்பட்ட குடும்பநலக் கண்காட்சியை மக்களவைத் தலைவர் டாக்டர் பால்ராம் ஜாக்கர், தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு. இராசாராம், முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள், நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எச். வி. அண்டே, திரு. சத்பால் மிட்டல், எம். பி. முதலியோர் பார்வையிடுகிறார்கள்.

பெரிய அம்மை நோயை அடியோடு ஒழிப்பதில் வெற்றி கண்டிருக்கிறோம். இப்போது தொழு நோயை ஒழிப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் நிலையில் இருக்கின்றோம். நமது நாட்டிலிருந்து தொழு நோயை அடுத்த 20 ஆண்டுகளில் ஒழித்தாக வேண்டும். இந்த மாபெரும் பொறுப்பை—கடமையை நமது மத்திய—மாநில அமைச்சர்களும், எல்லா மருத்துவப் பிரிவினரும் ஒருங்கிணைந்து செயலாற்றி நிறைவேற்றிட வேண்டுமென விரும்புகிறேன். அதே போல கண் குருடாவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும், விரிவுபடுத்திச் செயல்பட்டாக வேண்டும். இப்படிச் சொல்வதால் மற்ற நோய்களின் அபாயத்தைக் குறைத்துக் கூறுகிறோம் என்று பொருள் அல்ல. மற்ற வியாதிகளைத் தீர்க்கும் பணிகளை ஒதுக்கி விடாது, ஒட்டு மொத்தமான நல்வாழ்வை அளிப்பதற்காக ஒருங்கிணைந்து செயல்படுகின்ற அதே நேரத்தில்,ஒன்று அல்லது இரண்டு குறிப்பிட்ட வியாதிகளை அடியோடு ஒழிப்பதற்காக நாம் முனைப்பாக பணியாற்ற வேண்டும்.

## மிகமிக அவசரமாக செய்ய வேண்டியது!

நமது பணிகளில் மிக முக்கியமான ஒன்று மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது ஆகும். இது முறைப்படியான ஒன்று என்ற போதிலும், மக்கள் தொகைப் பெருக்கத்தின் பேரளவு அபாயத்தையும், அதனாலே நமது திட்டப் பலன்கள் பாதிக்கப்படுவதையும் நாட்டு மக்கள் உணர்ந்து வருகிறார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். பெருகி வரும் மக்களுக்கு உணவளிப்பது மட்டும் நம் முன்னே இருக்கின்ற பிரச்சினை அல்ல. சில ஆண்டுகளுக்குள், மக்களைவிட அதிகமான அளவு உணவு உற்பத்தியை அல்லது வேளாண்மை உற்பத்தியை பெறுவோம். ஆனால் குழந்தைகளும், வயது வந்தவர்களும் உணவுக்கான தானியங்களைத் தவிர வேறு பல வாய்ப்பு வசதிகளைப் பெற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்குச் சரிவிகித உணவு தேவைப்படுகிறது. துணி, வீடுகள், வேலை வாய்ப்பு போன்ற பல்வேறு வசதிகளைப் பெற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள், அவர்கள். எனவே, மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய மிக மிக அவசரமாக செயற்படவேண்டிய காரியம் ஆகும். நாட்டினுடைய மொத்த வளர்ச்சி என்பதிலிருந்து நல்வாழ்வும், குடும்பநலமும் பிரிக்க முடியாதவையாக இருக்கின்றன. நமது நாட்டு மக்களுக்கு இன்னும் சிறந்த வாழ்வை அளிக்க வேண்டிய நமது கனவு நிறைவேற்றப்பட வேண்டுமானால், நமது நாட்டுப் பிறப்பு விகிதம் குறைக்கப் பட்டாக வேண்டும். புள்ளி விவரங்களுக்காக நாங்கள் இதைச் சொல்லவில்லை. ஆனால் ஒவ்வொரு நாளும் இதன் காரணமாக மில்லியன்கள் அளவில் இதில் சம்மந்தப்படுகிறார்கள். ஒவ்வொரு மனிதனும், குழந்தையும் வாழ்க்கையில் நல்ல வாய்ப்பைப் பெற்றாக வேண்டும். எப்படி? நல்ல உணவு, வீடு, கல்வி, வேலை வாய்ப்பு உடல் வலிவு போன்ற எல்லாவகையான தேவைகளையும் பெற்று அவர்கள் முழுமையான வாழ்வு நடத்த வேண்டும். இத்தகைய நிலையை அடைவதற்கு மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைத்தாக வேண்டும். ஏற்படுகின்ற பொருளாதார வளர்ச்சியைக் காட்டிலும் மக்கள் தொகை வளர்ச்சி குறைவாக இருந்தால் தான் இத்தகைய நிலை உருவாக இயலும். சில குடும்பத்தின் அவசியத்தைப் பற்றி நமது மக்களுக்கு விளக்கியாக வேண்டும்—மக்களுக்கான குடும்பநல விளக்கக் கல்வியைத் தந்தாக வேண்டும். சில குடும்ப நெறியை ஏற்பதன் பொருட்டு, எத்தகைய குடும்பநல முறைகளைக் கையாளலாம் என்பதைப் பற்றியும் அவர்

களுக்கு அறிவுறுத்தியாக வேண்டும். கி. பி. 2000க்குள் பிறப்பு விகிதத்தை 1000—க்கு 21 ஆகவும், இறப்பு 9 என்றும், குறைக்க வேண்டியது நம் குறிக்கோள் ஆகும். சரியானதும், நடைமுறைக்கு ஒத்துவரக்கூடியதுமான இந்தக் குறிக்கோளை நாம் எட்டியாக வேண்டும்.

## அதிகப்படியான மக்களை எங்கே வைத்துக் காப்பது?

நமது நாட்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்து அண்மையில் புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அந்தப் புள்ளி விவரங்கள் நமக்கு எச்சரிக்கையாக அமைந்துள்ளன. அதோடு கூட மக்கள் தொகைப் பெருக்கத்தை நம்மால் கட்டுப்படுத்த முடியும் என்ற உண்மைகளை அவை தெளிவாக்கி இருக்கின்றன. இதில் குறுகிய நோக்குள்ள அரசியல் புக அனுமதிக்கக் கூடாது. சமுதாயத்தில் உள்ள எல்லா வகையினரையும் —எல்லா மதத்தினரையும்—எல்லாப் பிரிவினரையும் மிகச் சாமார்த்தியமாகவும், அன்பாகவும், உறுதிப்பாட்டோடும் அணுகி, குடும்ப நலத் திட்டத்திற்கு அவர்களது ஆதரவு கிட்டும்படி செய்ய வேண்டும். நாட்டிலே பெருகி வருகின்ற அதிகப்படியான மக்களை எங்கே வைத்து நாம் பாதுகாக்க முடியும்? ஏற்கனவே நம்மிடமுள்ள நிலப்பரப்பு அதிகமாவதற்கு வாய்ப்பு இல்லை. வானத்திலிருந்து பொழியும் மழையின் அளவு அதிகமாவதற்கோ—ஆற்று நீரை அதிகமாகப் பெறுவதற்கோ வாய்ப்பு இல்லை. தாம் தானிய வகைகளை அதிகமாக உற்பத்தி செய்து வந்தாலும் கூட, நல்வாழ்வுக்குத் தேவையான பசுமையான மரங்களும், மற்றவையும் நாட்டில் குறைந்து கொண்டே வருகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய குழந்தைகளுக்குப் பள்ளி வசதிகளையும், வேலை வாய்ப்பு வசதிகளையும், திறந்த வெளிகளையும், எப்படிக் கொடுக்கப் போகிறோம்? அவர்களுக்கு மன நிம்மதியை எவ்வாறு அளிக்கப் போகிறோம்? மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை அவர்களுக்கு எப்படிக் கிட்டச் செய்ய போகிறோம் என்பதெல்லாம் கேள்விக் குறிகளாகவே இருக்கின்றன.

## வாழ்வா? சாவா?

குடும்ப நலத் திட்டத்தை அரசுக் கொள்கையாக செயல்படுத்திய முதல் நாடு நமது நாடாகும். நாம் எடுத்துள்ள முயற்சிகள் குறிப்பிட்ட அளவு குழந்தைகள் பிறப்பதைத் தடுத்துள்ளன என்றாலும், இதில் எதிர்பார்த்த வெற்றியை நாம் அடையவில்லை என்பதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். நமக்கு வாழ்வா சாவா என்பதை நிர்ணயிப்பது, இந்த மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினை என்ற காலக் கட்டம் ஏற்கனவே வந்து விட்டது. மக்கள் தன்னிச்சையாக இந்தத் திட்டத்தை மனப்பூர்வமாக ஏற்பதற்கு வகை செய்யும் முறையில் எப்படியெல்லாம் நம்மை நாமே அர்ப்பணித்துக் கொண்டு உறுதிப்பாட்டுடனும், உள்ளப் பூர்வமாகவும் பணியாற்றலாம் என்பதற்கான வழிமுறைகளை இந்த மாநாடு வகுத்தளிக்க வேண்டும். 'குடும்ப நல்வாழ்வு' (Family Welfare) என அழைக்கப்பட்டு வரும் இத்திட்டத்தைக் 'குடும்ப நலத் திட்டம்' (Family Planning) என்று மாற்றி அழைக்கலாம் என்ற ஒரு கருத்தும் இங்கே வைக்கப்பட்டுள்ளது. இது பற்றி இந்த மாநாடு தான் முடிவு செய்ய வேண்டும். இப்பக்கமோ, அப்பக்கமோ இது பற்றி எந்த விதமான கருத்தையும் வெளியிட வில்லை. ஆனால் பெயர் மாற்றங்கள் ஒரு பெருத்த மாறுதலை ஏற்படுத்தும். என நான் கருதவில்லை. குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தையும், அவசரத்தையும், அனைத்து மக்களிடையேயும் எடுத்துச் சொல்லி விளக்கிட வேண்டும். சிறு குடும்பங்களை அமைத்துக் கொள்ள வேண்டியதின் இன்றியமையாமையை—நன்மைகளை பயணக் குடும்ப நலப் பிரச்சாரத்தின் மூலம் மக்கள் புரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். அதுதான் தேவைப்படும் இப்போதைய நமது பணியாகும்.

அண்மையில் வெளியிடப்பட்டுள்ள நம் நாட்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங்கள் ஐயறவு வாதிகளைக் கூட உண்மைகளைச் சந்திக்கும்படி செய்து இருக்கின்றன. இதன் காரணமாகத் தேசிய அளவில் ஒரு கருத்து ஒருமைப்பாடு நிலவுகிறது. குடும்ப நலத் திட்டம் குறித்த மாநில சிறப்புக் குழுக்களுக்கு மாநில முதலமைச்சர்கள் தலைமையேற்று நடத்த வேண்டும். இத்தகைய குழுக்கள் அரசுச் செயலாளர்கள் அடங்கிய குழுக்களால் உதவப்பட வேண்டும். மாவட்ட மட்டத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரடிப் பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களுடையதாக இருத்தல் வேண்டும். குடும்ப நலத் திட்டத்தைச் சரிவர நிறைவேற்றாமல் அந்த வகையில் பின் தங்கியிருக்கின்ற மாவட்டங்களின் பால் தனி அக்கறை காட்டி இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இன்னும் 40 ஆயிரம் குடும்பநல நிலையங்களைத் திறக்க அரசு முடிவு செய்யப்பட்டுள்ளது. திட்டச் செயலாக்கத்திற்கு தேவையான உள் அமைப்பு(Infrastructure)வசதிகளை அதிகப்படுத்துவது, உதவிச்செவிலியர், மருத்துவச்சிகள் பயிற்சி குறித்த வசதிகளை அதிகப்படுத்துவது ஆகியவை அவசியமா என்பது பற்றியெல்லாம் இந்த மாநாடு விவாதித்து முடிவு செய்ய வேண்டும்.

அந்தந்தக் கிராம மக்களுடைய மரியாதையையும் —கிராம சமுதாயத்தினுடைய முழு நம்பிக்கையும் பெற்றவரும், அந்தந்தக் கிராமங்களிலேயே வாழ்பவருமான ஒருவரை கிராம நல்வாழ்வு வழிகாட்டியாக ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்துவது சிறந்ததாக இருக்கும்.

## தன்னியக்க நிறுவனங்கள் :

குடும்பநலத் திட்டம் முழுக்க முழுக்கத் தனி மனிதனின் தனிப்பட்ட மிக அந்தரங்கமான ஒரு திட்டமாகும். குடும்பநலத் திட்டம் அரசாங்கத் திட்டமாக மட்டுமே இயங்கினாலும், அல்லது நகர்ப்புறங்களில் வாழ்ந்து கொண்டு மனப்பூர்வமாகப் பணியாற்றுகின்ற சமூக சேவகர்கள் அல்லது சமூக சேவகிகள் பொறுப்பில் இந்தத்திட்டம் செயல்பட்டாலும் வெற்றிபெறாது. குடும்ப நலத் திட்டம் ஒரு மக்கள் இயக்கமாக — சிறப்பாகத் தன்னியக்க நிறுவனங்கள் எல்லாம் பங்கேற்றுப் பணியாற்றி வெற்றி தேடித் தருகின்ற மக்கள் இயக்கமாக இது செயல்பட்டாக வேண்டும். இந்தத் திட்ட நிறைவேற்றத்திற்காக நாம் மேலும் மேலும் அதிகப்படியான தன்னியக்க நிறுவனங்களை ஊக்குவிக்க வேண்டும். தன்னியக்க நிறுவனங்கள் வெவ்வேறுவிதமாகத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரத்தில் கூட, அந்தத் திட்டங்களில் ஒன்றாகக் குடும்ப நலத் திட்டத்தை இணைத்துச் செயல்படுத்திட அவற்றை ஊக்கப்படுத்த வேண்டும் மக்களை ஊக்குவித்து — உற்சாகப்படுத்தி, குடும்பநலத் திட்டத்தை ஏற்கச் செய்வதில் அரசு அமைப்புகளின் பணியைவிட, தன்னியக்க நிறுவனங்களின் பணி மிகுந்த பயன் விளைவிக்கத் தக்கதாக அமையும். குடும்ப நல நிறைவேற்றத்திற்காகத் தன்னியக்க நிறுவனங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கும் அரசு தன்னால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்யும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பாளர்களுக்கு உதவி செய்வதற்கோ அல்லது தில்லியிலுள்ள யோஜனபவனத்திலிருந்து திட்டத்தை வகுக்கின்ற நிபுணர்களுக்கு உதவி செய்வதற்காகவோ இருக்கிற ஒரு தனிப்பட்ட திட்டம் குடும்ப நலத் திட்டம் அல்ல. ஒவ்வொரு தனி மனிதனுடைய நல்வாழ்வுக்கும் அல்லது குடும்பத்தினுடைய முன்னேற்றத்திற்கும் குடும்ப நலத்திட்டம் மிகமிக அவசியமானதொன்றாகும். பெண் தன்னுடைய முழுமையான நல்வாழ்வைப் பேணிக் காத்துக் கொள்ளவும் — தன்னுடைய குழந்தைகளுடைய நலத்தைக்காத்து அவர்களை முறையாக வளர்ப்பதற்கும்—சிறந்த வீடுகளைப் பெற்று வாழவும் — தன்னுடைய ஆளுமையை முழுமையாக வளர்த்துக் கொள்ளவும், குடும்ப நலத் திட்டத்தை ஏற்று வாழ வேண்டும். அப்படி ஏற்று வாழ்ந்தால்தான் பெண்கள் முழு உரிமை பெற்றவர்கள் ஆவார்கள்.

நம்முடைய பரந்த கள அனுபவத்தைக் கொண்டு, குடும்ப நலத் திட்டத்தை நாம் தாய் சேய் நலத் திட்டத்தோடு இணைத்துச் செயல்படுத்தி வருகின்றோம். தாழ்த்தப்பட்ட அல்லது பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக, பொருளாதார வாழ்வை உயர்த்துவது குறித்து அரசியல் சட்டத்திலுள்ள நெறி முறைகளை உங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அதே போல் பொருளாதார அடிப்படையில் பின் தங்கிய சமூகத்தினரின் நிலையை உயர்த்த வேண்டுமென அந்த நெறி முறைகள் கூறுகின்றன. தாழ்த்தப்பட்ட—பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழுகின்ற பகுதிகளில் ஆரம்ப சுகாதார மருத்துவ வசதிகளை முந்துரிமை அளித்து மாநில அரசுகள் ஏற்படுத்தித் தர வேண்டும்.

## நாட்டு மருந்துக்குச் சிறப்பான இடம் :

மருத்துவ விஞ்ஞானத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக அதன் ஒவ்வொரு கூறிலும் சிறப்புத் தன்மை ஏற்பட்டுள்ளது, அல்லது தனித்தன்மை உருவாகியுள்ளது. மற்ற விஞ்ஞானிகளைப் போலவே மருத்துவர்களும் நடைமுறைக்கு உகந்ததும், அறிவு அடிப்படையிலானதுமான நவீன கருவிகளை விரும்புவது இயற்கைதான். அத்தகைய நவீன மருத்துவக் கருவிகளை அவர்களுக்கு அளித்திட நாம் மறுக்கவில்லை. ஆனால் நமது நாட்டுச் சூழ்நிலையில் அத்தகைய நவீன, மயமான நிலை, நம்நாட்டில் நிலவும் எதார்த்தமான சமுதாய நிலையிலிருந்து மருத்துவர்களை வேறுபடுத்தி எங்கோ இட்டுச் சென்று விடுகிறது. சமுதாயத்துடன் இணைந்து செல்கின்ற நிலை அவர்களுக்குக் கிட்டாது போகிறது. நம்முடைய நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், மரபு ஆகியவற்றோடு ஒன்றிய ஒன்றாக, மருத்துவ சேவை இருக்க வேண்டும். மேற்கத்திய நாடுகளில் நிலவும் மருத்துவ நிருவாக முறை, வளரும் நாடுகளில் வெற்றியைத் தரும் என்பது நிரூபிக்கப்படவில்லை. ஒரே மாதிரியான நகர்ப்புறங்களில் வாழும்வசதி வாய்ப்புள்ள மக்களுக்கு பயன்படுகின்ற நவீன நகர்புற மருத்துவ மனைகளை அதிகப்படுத்துவதற்குச் சமமாகக் கிராமப்புற மக்களுக்குத் தக்க மருத்துவ வசதிகளை கொடுப்பதற்குரிய நிலைமைகளை உருவாக்குவதற்கு, அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் திட்டத்தின் கீழ் ஆவன செய்ய வேண்டும். அதாவது நகர்ப்புற மருத்துவ வசதிகளை பெருக்குவதற்கு ஈடாக இணையாக கிராமப்புற மருத்துவ வசதிகளைப் பெருக்க வேண்டும்.

அண்மைக்கால அறிவியல் கண்டுபிடிப்புகளை நாம் ஒதுக்கிவிட முடியாது. நம்முடைய மக்களுக்காக பூமியின் மறுபக்கத்திற்குச் சென்று மருந்துகளைக் கொண்டுவருவது குறித்துத் தவறான எண்ணங்கள் தேவையில்லை. ஆனால் காலம் காலமாக பயன்பட்டு வரும் நோய் தீர்க்கும் நாட்டு மருந்துகள்,—நாட்டு மருத்துவ முறை நமது நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் இன்னும் இருந்து நிலவி வருகிறது. விஞ்ஞான அடிப்படையில் அந்த மருந்துகளின் திறனை மெய்ப்பித்தப்பின் அவற்றைப் பயன்படுத்துவதற்கு நாம் பின் வாங்கக் கூடாது. தேசிய நல்வாழ்வுத் திட்டத்தில் நாட்டு மருந்துகளுக்கு —பொதுவான உடல்நலக் குறைவுகளை தீர்த்துவைக்கின்ற மருந்துகளுக்கு உரிய இடத்தை அளிக்க வேண்டும். குறிப்பாக நவீன மருத்துவம்—இதுவரை குணப்படுத்த இயலாத பொதுவான வியாதிகளைக் குணப்படுத்தக்கூடிய நாட்டு மருந்துகள் —நமது தேசிய நல்வாழ்வுத் திட்டத்தில் சிறபான இடம் பெற வேண்டும். பல்வேறு மருத்துவ முறைகளின் வாயிலாக சிகிச்சை அளிக்கின்ற ஓமியோபதி, ஆயுர்வேத, யுனானி, சித்த, நவீன மருத்துவர்களிடையே இது குறித்த கருத்துப் பரிமாற்றம் தொடர்ந்து இருக்க வேண்டும். நமது பண்டைய மருத்துவ முறைகளின் வாயிலாக வைத்தியத் தொழில் செய்கின்றவர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். அவர்கள் நம் மக்களுக்கு உரிய சிகிச்சைகளை அந்தந்த முறைகளின் வாயிலாக அளிக்க முடியும்.

## நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!

இங்கே ஒன்றை நான் எச்சரிக்கையாகக் கூற விரும்புகின்றேன். நான் சொல்லப் போகின்ற நிலை நமது நாட்டிலும் அநேகமாக மற்ற இடங்களிலும் கூட நிலவுகிறது. நமது இந்தியாவைப் பொறுத்த மட்டிலே இந்த எச்சரிக்கையைத் தெரிவிக்க விரும்புகிறேன். நமது நாட்டில் ஆணாக இருந்தாலும் அல்லது பெண்ணாக இருந்தாலும் ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே மருத்துவராகக் கருதிக் கொண்டு செயல்படுகின்ற நிலை இருக்கிறது. இத்தகைய சிகிச்சை முறைகளைப் பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கிராம வைத்தியர்களின் திறனை—அறிவை—ஆற்றலை நாம் அதிகப்படுத்த வேண்டும். கிராமப்புறங்களில் இருக்கின்ற மந்திரவாதிகள் அல்லது சூனியக் காரிகள் ஆகியோரை, மக்களின் மன நலத்தைக் காக்க அல்லது அதிகரிக்க பெரிதும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஒரு சிறந்த மனோ தத்துவ நிபுணர் குறிப்பிட்டதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். நாட்டு வைத்தியத்தின் மூலம் அதிகப் பலனை விளைவிக்க முடியுமானால் நவீன மருத்துவத் தொடர்பான செலவுகளை நம்மாலே குறைக்க முடியும். மக்களுக்காக செயல்படுத்தப்படும் நல்வாழ்வுத் திட்டம் செலவு குறைவானதாக அல்லது செலவற்றதாக இருக்க வேண்டும். விளம்பரத்தின் காரணமாக பெரிய பெரிய மருந்து நிறுவனங்கள் வெளியிடுகின்ற குறிப்பிட்ட மருந்துகளிலே தான் சக்தி அதிகம் என்ற தப்பான எண்ணம் நம்மிடையே நிலவி வருகின்றது. இத்தகைய தவறான எண்ணம் நமது மருத்துவர்களிடையே பரவாமல் இருப்பதற்கான நிலையை உருவாக்க மருத்துவக் கல்வி அதிக அக்கறை காட்ட வேண்டும். மிகத் திறமையான சிறந்த இளைஞர்களும், பெண்களும் மருத்துவ கல்வி பெற வருகின்றவர்கள் என்றாலும், குறிப்பிட்ட—அதிகமாக விளம்பரப் படுத்தப்படுகின்ற மருந்துகளிலே அவர்கள் நாட்டம் செல்லுகின்ற நிலைமை இருக்கின்றது.

சாதாரணமான வியாதிகளால் பொது மக்கள் துன்புறுவது அவர்களுடைய கவனத்தைக் கவரவில்லை. மருத்துவத்தில் சிறப்பு இயல்பு பொருந்திய மேற்படிப்பு



மத்திய நல்வாழ்வுக்குழு, மத்தியக் குடும்ப நலக் குழு ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தைப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றுகிறார். (இ. வ.) மத்திய நல்வாழ்வு—குடும்ப நலத் துறை அமைச்சர் திரு. பி. சங்கரானந்த் அவர்கள், பிரதமர் திருமதி இந்திரா காந்தி, மத்திய நல்வாழ்வு—குடும்பநலத்துறை இராஜாங்க அமைச்சர் திரு. என். ஆர். லஸ்கார் அவர்கள்.

படிப்பதற்கு அல்லது படித்து முடிப்பதற்கு நீண்ட காலத்தை அவர்கள் கல்லூரியிலே செலவிட வேண்டியிருக்கிறது. ஆனால் நோய்களை மூடி மறைக்க முடியாது. கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வாழுகின்ற மக்களிடையே, ஏற்படும் நோய்களைத் தீர்த்து அவர்களை காப்பாற்றுவதற்காக நாம் அதிகக் கவனத்தைச் செலுத்த வேண்டும். மருத்துவக் கல்வி அளிக்கின்ற பொறுப்பிலே இருக்கின்றவர்கள், செல்வம் மிக்க நாடுகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பொருந்துவதாக உள்ளதை விட மருத்துவக்கல்வி முறையினை நமது தேசியத் தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில் மாற்றி அமைப்பதற்கு முனைய வேண்டும்.

இதன் தொடர்பாக மற்றொன்றை குறிப்பிட விரும்புகிறேன். தனிப்பட்ட மருத்துவக் கல்லூரிகள் எம். பி. பி. எஸ். படிப்பில் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்காக ஆள் வரி அல்லது தலை வரி என்ற முறையில் பணம் வசூலிப்பதை உடனடியாக நிறுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென விரும்புகிறேன்.

நான் முன்பு குறிப்பிட்டது போல கிராமப் புறங்களில் அல்லது மலைப்பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கு மத்தியில் பணியாற்றுவதற்கு நமது மருத்துவர்களும், செவிலியர்களும் மிகுந்த ஆவல் உடையவர்களாக அல்லது வேட்கை உடையவர்களாக இல்லை. இப்போது மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு நகர்ப்புறங்களில் வாழுகின்ற மேட்டுக்குடி மக்களுக்குத் தான் அதிக வாய்ப்பு இருக்கிறதென்பது இதற்குரிய காரணமாகும். மருத்துவத்தில் பட்டப் படிப்பை முடித்தப் பின்பு அத்தகையவர்கள் பெரிய நகரங்களில் தான் வேலை செய்ய விரும்புகிறார்கள். கிராமப்புறங்களிலே பணியாற்றுகின்றவர்களுக்கு ஊக்கத் தொகை அளிப்பது குறித்து நாம் தீவிரமாகச் சிந்தித் தாக வேண்டும். சோவியத் ரஷ்யாவில் இருந்து வந்த அமைச்சர் ஒருவர், தங்களது நாட்டில் நகர்புறங்களில் பணியாற்றுகின்ற மருத்துவர்களை விட கிராமப் புறங்களில் வேலை செய்கின்ற மருத்துவர்களுக்குத் தான் சம்பளம் அதிகமாக கொடுக்கப்படுகிறது என்று தெரிவித்தார். பயிற்சிக் காலத்தில் மருத்துவர்கள் மாவட்டங்களிலே உள்ள மருத்துவ மனைகள், சிறு நகரங்களிலே இருக்கின்ற மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டுப் பணியாற்றியாக வேண்டுமென்ற ஆலோசனை என்னை வெகுவாகக் கவர்ந்தது.

இந்த வகையில் ஏற்படுகின்ற வளர்ச்சியினை அவ்வப்போது ஆய்வதற்காக அமைச்சர்கள் குழு ஒன்றினை ஏற்படுத்துவோம். நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் குடும்ப நலத் திட்டம் எப்படி செயல்படுத்தப் படுகிறது அல்லது எப்படி செயல்படுத்தப் படவேண்டும் என்பது பற்றி ஆலோசனைகள் வழங்குவதற்காக ஒரு ஆலோசனை வாரியத்தை ஏற்படுத்த வேண்டுமா என்பது பற்றி நீங்கள் முடிவு எடுத்துச் சொல்ல வேண்டும்.

நல்வாழ்வு, குடும்பநலமத்தியக் குழுக்களின் கூட்டுக் கூட்டத்தை துவக்கி வைப்பதில் நான் பெருத்த மகிழ்ச்சி அடைகிறேன். 'கி. பி. 2000—க்குள் அனைவருக்கும் நல்வாழ்வு',—அதாவது அடுத்த 20 ஆண்டுகளுக்குள் அனைவருக்கும் நல்வாழ்வு தருவது குறித்து இந்த மாநாடு நல்ல முடிவுகளைத் தரும் என நம்புகிறேன்.

தமிழாக்கம் : எஸ். முத்துராமலிங்கம்



# அளவோடு இருக்கும் குடும்பங்களுக்குச் சிறப்பு சலுகைகள் தரவேண்டும்!

## முதலமைச்சர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள்

*(சென்னை இராசாசி மண்டபத்தில் 30—8—81 ஆம் நாள் நடைபெற்ற, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களின் முதலாவது 'மக்கள் தொகை மற்றும் வளர்ச்சிப்பணி' மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றிய தலைமை உரை)*

அன்புள்ள மக்கள் தொகை மற்றும் வளர்ச்சிப்பணி அமைப்பினுடைய தலைவர் திரு. மிட்டல் அவர்களே, டெல்லி மாநகரத்தில் நாடாளுமன்றத்தில் மிகப் பெரிய பொறுப்பினை ஏற்றுப் பணியாற்றுகின்ற அதே வேளையில், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, இந்த நல்ல மாநாட்டினைத் தொடங்கி வைக்க வந்து, நல்ல கருத்துக்களை எடுத்து வைத்த மாண்புமிகு நாடாளுமன்றத் தலைவர் அவர்களே, தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, சட்டமன்றப் பேரவை—மேலவை உறுப்பினர்களே, ஏனைய அதிகாரிகளே, மற்றும் ஏனைய பகுதிகளிலே இருந்தும், பல்வேறு அலுவலகங்களிலிருந்தும், நிறுவனங்களிலிருந்தும் வந்திருக்கின்ற நண்பர்களே, தாய்மார்களே, என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புக்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில பிரச்சினைகளைப் பற்றிப்பேசும் பொழுது நம்மை அறியாமலேயே நாம் மகிழ்ச்சியுறுவதும் அக்கறை காட்டுவதும், எழுச்சி கொள்வதும், நம்மை அறியாமலேயே நாம் எங்கே இருக்கின்றோம் என்பதைக் கூட மறந்து கை தட்டுவதும், சிரிப்பதும், ஒருவருக்கொருவர் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து, அதிலே இணைந்து கொள்வதும் என்கின்ற நிலைமை, அவ்வப்போது மேடையிலே பேசுகின்றவருக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் நடைபெறும். ஆனால் இந்தக் குடும்ப நலத்திட்டம் சம்பந்தமாகப் பேசினால் மட்டும்—எவ்வளவு தான் சிரிக்கச் சிரிக்கப் பேசினாலும்—சிரிக்க வைக்க வேண்டுமென்று பேசினாலும் கூட, ஏதோ நமக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாதது போல, உள்ள உணர்வுகளை வெளிப்படுத்தாமல் சிலை போல் உட்கார்ந்து, அரை மணி நேரம், முக்கால் மணி நேரம் ஆனவுடன் கொஞ்சம் நெளிவதும், சுளிப்பதும் போன்ற நிலையைத் தருகின்ற பிரச்சினைக்குரிய தலைப்பு குடும்பநலத் திட்டம்.

சில வேளை அதைப் பற்றிப் பேசும்போது சிலருக்குத் தோன்றலாம். என்ன இது? நமக்குத் தெரியாதது இதில் என்ன இருக்கிறது. அதுவும் இதற்கு ஏன் ஒரு மாநாடு? அதைத்தான் நாம் அன்றாடம் பார்த்துக் கொண்டும், பேசிக் கொண்டும், போராடிக் கொண்டும் இருக்கிறோமே! இதற்கு என்று தனியாக ஒரு மாநாடு வேண்டுமா என்று நினைக்கலாம். என்னைப் போன்ற சிலர், ஏன் நான் என்னைப் போல என்று சொல்லிக் கொண்டேன் என்றால், என்னையே சொல்லிக் கொண்டால், வேறு யாரும் தவறாகக் கருதமாட்டார்கள் அல்லவா? அதனால் தான் அப்படிச் சொன்னேன். ஆனால் இதிலே நாம் ஒன்றை எண்ணிப் பார்த்தால், அதிலும் அரசியல்கட்சிகளிலே பங்கு கொண்டிருப்பவர்கள் என்ற வகையில்—சமுதாய மேம்பாட்டில் நாம் பெரும் பங்கு கொண்டவர்கள் என்கிற நிலையிலே, நம்மை முன்னிலைப் படுத்தி, சிந்தித்துப் பார்த்தோமானால், அது அவ்வளவு சாதாரண ஒருபிரச்சினை அல்ல என்பதை நாம் உணர முடியும்.

சில இளைஞர்கள் திருமணம் ஆகாதவர்கள் கூட இங்கேயிருக்கலாம். அவர்களுக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரிய முடியாது. புரிந்து கொள்ளக் கூட முடியாது. ஆனால் அவர்களுடைய பெற்றோர்கள், அல்லது உறவினர்கள், அல்லது அக்கம் பக்கங்களிலே உள்ளவர்கள் ஆகியோரைப் பற்றியும், அனுபவப்பட்டவர்களைப் பற்றியும் எண்ணிப் பார்க்க முயற்சித்தால், நிச்சயமாக அது ஒரு சமுதாயப் பிரச்சினை என்பது மட்டும் அல்ல, மாபெரும் தேசியப் பிரச்சினை என்பதை உணர முடியும்.

அது ஒரு குடும்பத்திற்குள் மட்டும் நடைபெறுகிற ஒரு சாதாரணப் பிரச்சினை அல்ல. ஒரு குடும்பத்திற்குள்ளே ஏற்படுகிற நிலைமைகளின் விளைவுகள் அந்த ஊரையும், அந்த மாநிலத்தையும் ஒட்டு மொத்தமாகத் தேசத்தையும் பாதிக்கக் கூடிய ஒன்று என்பதை நாம் நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே எனது முதல் வேண்டுகோள் ஆகும்.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை மேலவை உறுப்பினர்களின் மக்கள் தொகை மற்றும் வளர்ச்சிப்பணி மாநாட்டில் முதல்வர் அவர்கள் தலைமையுரையாற்றுகிறார்.




## மகிழ்ச்சியடைகிறோம்

இந்த மாநாட்டை இங்கே கூட்டியிருப்பதை, நான் உண்மையிலேயே பெருமையோடு தமிழக அரசின் சார்பாக—சட்டப் பேரவையின் சார்பாக—மேலவையின் சார்பாக—தமிழகத்திலே இருக்கிற அத்துணை அரசியல் கட்சிகளின் சார்பாகவும், பெருமையோடு வரவேற்றுப் பாராட்டுகிறேன். இதிலே நான் பங்குகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன் என்பதை மக்களவைத் தலைவருக்கும், நண்பர் மிட்டல் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம் தில்லியிலே நடந்த மாநாட்டிற்குப் பிறகு, மறுபடியும் நடக்கும் முதல் மாநாடு, இங்கே தமிழகத்திலேதான் நடக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, தமிழகத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் என்ன எண்ணியிருக்கிறார்கள் தமிழகத்தின் மீது அவர்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பது புரிகிறது. திட்டங்களை நிறைவேற்றுவதில் நாம் எவ்வளவு கட்டுத் திட்டத்தோடு, மக்களுடைய மனத்தைப் புண்படுத்தாமல், யாரையும் அச்சுறுத்தாமல், வற்புறுத்தாமல் நம் கடமைகளைச் செய்கிறோம்—மற்ற மாநிலங்களைவிட, நாம் அனைவரும் ஒருமித்த குரலிலே எண்ணங்களைச் சொல்லி, ஒன்றுபட்டு நின்று குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்தி வெற்றி கண்டிருக்கிறோம் என்ற அனைத்தையும் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அதை உணரும்போது நாம் ஒவ்வொருவரும் தலை நிமிர்ந்து நின்று, அதைப்பற்றி பெருமையோடு எண்ணிப்பார்த்து மகிழ்ச்சியடைகிறோம்.

கடமை, கட்டுப்பாடு என்று சொல்வதற்குப் பின்னாலே, ஒரு பிரச்சினையைத்தான் நாம் அனைவரும் ஏறக்குறைய எண்ணுகிறோம். ஒரே வீட்டில் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெறாமல் இருந்து விட்டால் போதும்—அதிகக் குழந்தைகள் வேண்டாம்—இரண்டு போதும் என்று நினைப்பதால் மட்டும் சமுதாயத்தில் தற்போது இருக்கும் நிலையில் ஒரு மாபெரும் மாற்றத்தைக் கண்டுவிட முடியாது. அதன் அடிப்படையில் சில கருத்தாழம் மிக்க எண்ணங்கள் இருக்கின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அப்படிப் புரிந்தவர்கள் மற்றவர்களுக்குச் சொல்லியாக வேண்டும்.

முதல்வர் அவர்களோடு, இந்திய மக்கள் அவைத் தலைவரும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் மற்றவர்களும் மாநாட்டிற்கு வருகிறார்கள்.



## நூறு 150 ஆகிவிடுகிறதே !

இரண்டு குழந்தைகள்தான் பெற முடிந்தது, அது போதும் என்று நிறுத்திக் கொண்டோம் என்று சொல்ல முடிந்தால், அதை மற்றவர்கள் பாராட்டுகிறார்கள். அதற்குப் பின்னால் என்ன இருக்கிறது? ஒவ்வொரு அரசியல் கட்சியும் தேர்தலில் ஓட்டுப் பெற்று வந்திருக்கிறார்கள். அந்த அரசியல் கட்சிகள் மக்களிடம் என்னென்ன சொன்னார்களோ அவற்றை நிறைவேற்றுவதற்கு அடிப்படைத் தடைக்கற்களாக அமைவது என்னவென்று—எது என்று பார்த்தால் அதிகமான பிறப்புகள் தான் என்பதை நாம் அறிகிறோம். அதுதான் உண்மை நிலை.

இதை நாம் புரிந்து கொள்ள மறுக்கிறோம். இல்லை, அதை எதிர்த்துச் சொல்ல அவர்கள் முன்வரவில்லை என்று குறிப்பிட வேண்டியிருக்கிறது. அதிகாரிகள், தலைவர்கள், ஒருசில அரசியல்வாதிகள், அரசியல் தொண்டர்கள், தோழர்கள் அத்தனை பேரும் இதில் பங்கு கொள்வதாக வைத்துக் கொண்டாலும் கூட ஒட்டு மொத்தமாக ஒருமித்த கருத்திருந்தாலும், ஒன்றாக இருந்து இதற்காகச் செயல்படுகிறோமா என்றால், அந்த நிலைக்கு நாம் இன்னும் முழுமையாக வரவில்லை. இங்கே இதைச் சுட்டிக்காட்டுவது நம் வீட்டிற்குள் நம்மைப் பற்றி சொல்கிற நிலையில், அது சரியானது என்று நான் கருதுகிறேன்.

நாம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாதவர்கள் அல்ல. இன்றுதான் இதைப்பற்றி பேசுகிறோம் என்பதில்லை. ஆகவேதான் நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன், பொருளாதார, சமுதாய ஏற்றத் தாழ்வு என்றால் அந்தப் பிரச்சினை-வீடுகள் தேவை என்றால் அந்தப்பிரச்சினை—உணவை முழுமையாக, வயிறார உண்ண வசதி வேண்டுமென்றால் அந்தப் பிரச்சினை—வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டுமென்றால் அந்தப் பிரச்சினை—அதுபோக நாட்டின் பொருளாதார வளர்ச்சி பற்றியோ ஒரு தொழிலைப் பற்றியோ எண்ணினால் அந்தப் பிரச்சினை இவை அத்தனையும் இந்தக் குடும்பநலத்திட்டத்தின் பின்னணியில் நின்று, நமக்கு அச்சத்தைத் தருகிற அளவிற்கு அது பூதகாரமாக இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள மறுக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திட்டங்கள் போடுகிறோம், பணம் ஒதுக்குகிறோம். அவை அத்தனையும், 100 பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதற்காக போடுகிற திட்டங்கள். அதில் 100 க்கு 100 பேர்களுக்கு வேலை கொடுக்க முடியாமல் 15 அல்லது 30 இல்லை 75 என்று வைத்துக் கொண்டாலும் கூட, அவர்களுக்காவது கொடுக்க முடியும் என்று எண்ணும்போது, ஒருமூன்று நான்கு ஆண்டுகளுக்கு இடையில் அந்த 100 என்பது 150 ஆக ஆகிவிட்டால், 75 என்று வரும்போது பாதிக்குப்பாதி என்ற நிலைமை வந்து மீண்டும் அந்தப் பயங்கரமான வேலையில்லாத் திண்டாட்டம், போதிய உணவு இன்மை, அதேபோல் வாழ்க்கை நிலை, வருமானப் பிரச்சினை இவ்வளவும் நமக்கு வருகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

யார் ஆட்சியில் இருந்தாலும் சரி, எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் சரி இந்தப் பிரச்சினைக்கு நல்லதொருமுடிவை நாம் காணவேண்டும் என்ற நிலையை உருவாக்கிக் கொண்டாலொழிய, எவ்வளவு பெரிய வல்லுனராக இருந்தாலும் சரி—எவ்வளவு ஆயிரம் கோடி ரூபாய் செலவழித்தாலும் சரி—எவ்வளவு அரிய பெரிய திட்டங்களைத் தீட்டினாலும் சரி—அவை போதாதவை ஆகிவிடும்; போதாது என்பது மட்டுமல்ல, விளைவு விபரீதமாகத் தோன்றிவிடும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.


நாம் எதிர்பாராமலேயே இளைஞர்கள் ஆங்காங்கே தவறு செய்கிறார்கள் என்றால் என்ன காரணம்? ஐந்து பவுன் சங்கிலிக்கு ஒரு கொலை நடக்கிறது என்று சொன்னால் என்ன காரணம்? இல்லாமை என்பது மட்டுமல்ல, தவறு, அவர்கள் கற்பனை செய்த வாழ்க்கையில் இருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்கு அவர்கள் செல்கிறபோது சமுதாய ஏற்றத் தாழ்வுகள் பற்றி விளக்கம் கூறுகிறபோது அந்தக் கருத்துக்கள் அவர்கள் மனதில் பதிந்து விடுகின்றன. சிறு வயதுக் குழந்தைகள், வாலிபத்தில் இருக்கும் போது நமக்கு இவை எல்லாம் கிடைக்கப் போகிறது என்று எண்ணிக் கொண்டிருந்தவர்கள், கவனிக்கப் படாமலிருக்கிறவர்களாக இருக்கும்போது அங்கே அவர்கள் உள்ளத்தில் எப்படியாவது அதைப் பெற்றாக வேண்டும்—அதை எந்தக் குறுக்கு வழியிலும் பெறலாம்—அது யாருக்கு விரோதமாகயிருந்தாலும் சரி, நாம் அதை அடைந்தே தீர வேண்டும் என்ற வகையில் முயற்சிக்கிற திட்டங்கள் அவர்களுடைய செயல்கள், வன்முறைகள், சமுதாய சீர்கேடுகள் ஆகியவற்றை உண்டாக்கக்கூடிய தவறான வழிமுறைகளை உருவாக்கி விடுகின்றன.

இதை நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் எவ்வளவு பெரிய பேச்சாளர்களாக இருக்கட்டும்—நகைச்சுவைப் பேச்சாளர்களாக இருக்கட்டும், சிரிக்க வைக்கலாம். ஆனால் சிந்திக்க வைப்பதற்கு, உள்ளத்திலே பதிய வைப்பதற்கு நிகழ்ச்சிகளைக் கண்ணால் பார்ப்பது போன்ற வகையில் அவை அமைய வேண்டும். வீட்டுக்குப் போய் உட்கார்ந்து குழந்தையைப் பார்க்கிறபோது இந்தக் குழந்தை நன்றாக வளர வேண்டுமென்றால் இன்னொரு குழந்தை பிறக்காமல் இருக்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதைச் சிந்திக்க வைக்கின்ற அளவுக்கு நம்முடைய பேச்சுக்கள் இருக்க வேண்டும். சில வளமையான வார்த்தைகளை சொன்னால் போதாது. எதுகை மோனைகளை, அடுக்குச் சொற்களைச் சொன்னால் போதாது. உள்ளத்திலே பதியத்தக்க வகையில்—உணர்ச்சியை மாற்றுகிற வகையில்—எப்போதும் அதைப்பற்றியே சிந்திக்கக் கூடிய வகையில் அவர்களை மாற்றுகிற கருத்துக்களைச் சொல்கிறவர்களாக நாம் இருந்தாக வேண்டும்

நம்முடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஹாஜா-ஷெரீப் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். பின்னாலே அமைக்கப்பட இருக்கிற ஒரு குழுவுக்குக் கூட அவர்கள் தலைவராக இருக்கப் போகிறார்கள். அந்தப் பணி நடைபெறுவதற்கு மிகப்பெரிய பக்கபலமாக அவர் இருக்கிறார் என்று எண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள். அதிலே அவர்களுக்குப் பிரச்சினை வரலாம். ஆனால் அதை அவர்கள் சந்திப்பார்கள், நிச்சயமாக அதிலே வெற்றி பெறுவார்கள் என்பதிலே எனக்கு ஐயமில்லை. நாம் அதற்கு ஒத்துழைத்தாக வேண்டும்.

## புண்படுத்தக் கூடாது

எந்தப் பிரச்சினையைச் சொன்னாலும் இன்னொருவர் உள்ளத்தைப் புண்படுத்தாத அளவிற்குச் சொல்ல வேண்டும். அதோடு அவர்கள் ஏற்றுக் கொள்கின்ற முறையிலே கருத்துக்களை வெளியிட வேண்டும். ஒரு நேர்மையான நல்லெண்ணத்திற்குச் சொந்தக்காரர்களுடைய செயல்முறையாக இருக்கக் கூடிய வகையிலே அது அமைய வேண்டும். இன்னொருவர் மனத்தைப் புண்படுத்தி தலைகுனியச் செய்கிற வகையில் அவமானப் படுத்துகிற வகையில் பேசி, அதன் மூலம் தன்னுடைய கருத்திலே வெற்றிபெறலாம் என்று என்னைப் போன்றவர்கள் இருக்கிறார்கள் என்று சந்தேகப்பட்டால், நான் அதை மாற்றிக் கொள்ள வேண்டும். அதைப்போன்ற எண்ணம் யாரிடமாவது இருந்தால் மாற்றிக் கொள்ள வேண்டும். நான் என்னையே சொல்கிறபோது சட்டமன்றத்திலே நடக்கிற நிகழ்ச்சியைச் சொல்கிறேன் என்று எண்ணக் கூடாது, நான் இப்போது சொல்வது பத்திரிக்கையிலே வராது. ஆகவே துணிந்து சொல்கிறேன், பிரச்சினைகள் பல்வேறு வகைகளில் வருகின்றன.



மாநாட்டிற்கு வரும்போது முதல்வர் அவர்கள், நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களோடு உரையாடுகிறார்.

## அடிப்படைக் கல்வியிலேயே மாற்றம் வேண்டும்

குழந்தைகளை வளர்ப்பதிலே—தொழில் முறையிலே குழந்தைகளை வளர்ப்பதிலே நாம் அக்கறை காட்டியாக வேண்டும். பள்ளிக் கூடத்திற்குப் புத்தகங்களை அதிகமாகத் தூக்கிக் கொண்டுபோய் படித்துவிட்டு வீட்டுக்கு வருகிறார்கள் என்று சொல்வதிலே நமக்குப் பெருமை கிடையாது. குழந்தைகள் படித்துவிட்டு வீட்டுக்கு வந்தால், ஒருநாள் கற்றுக்கொண்ட கல்வி அடுத்த நாள் அந்தக் குழந்தையை வளரச் செய்யக் கூடியதாக அமைய வேண்டும். அடுத்த நாள் செயல்முறைகளை ஒழுங்கு படுத்திக் கொள்ளவும், வகைப்படுத்திப் பயன்படுத்திக் கொள்ளவும் உதவியாக அந்தக் கல்வி அமைந்திருக்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் அடிப்படைக் கல்வியிலே மாற்றம் கண்டாக வேண்டும். அதைப் பெற்றோர்களுக்கும் தெரிவித்தாக வேண்டும். அது மிகமிகத் தேவை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அப்படியே உடனடியாக மாற்றுவது என்பது இயலாத காரியம். கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக் கொண்டே வருகிறோம். இன்னும் 3, 3½ ஆண்டுக் காலம் இருக்கிறது. அதற்குள் நிறைவேற்றியாக வேண்டும்.

## சிறு குடும்பக் கொள்கை நிரந்தரமானது !

குடும்பநலத்திட்டம் ஐந்தாண்டுகளுக்குள் தீர்ந்து விடக் கூடிய பிரச்சினையல்ல. மக்கள் சமுதாயம் உள்ள வரையில் அதைப் பற்றிப் பேசி, சிந்தித்து அல்லது தனக்குத்தானே எண்ணிச் செயல்பட வேண்டிய நிரந்தரமான கொள்கையாக குடும்பநலத்திட்டம் இருக்கும்.

என்பதை மனத்திலே பதியவைக்க வேண்டும். இஸ்லாம் மதத்திலே எத்தனை திருமணங்கள், எத்தனை குழந்தைகள் என்று கிடையாது. அவற்றிற்குக் கட்டுப்பட்டு இருந்தால், மதக் கொள்கை இல்லாவிட்டால் அதற்கு விரோதமாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதைமாற்றி உணரவைக்கிற மாபெரும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதைச் செய்தாக வேண்டும். ஒரு புறத்தில் குடும்பநலத்திட்டம், இன்னொரு புறத்திலே, இல்லையென்றால், சில பிரச்சினைகளை உருவாக்கி விடுவார்கள். சிலருக்கு அது விளையாட்டாகக்கூட இருக்கலாம். அல்லது அரசியலிலே நன்மை பயப்பதாகக் கருதி தவறாக அதிலே ஈடுபடுவார்கள். ஆகவே தம்மைப் பொறுத்த வரையில், பொது நன்மையை முன்னிட்டு இதை நாம் மாற்றியாக வேண்டும்.

## ஒருசிலருக்கு மட்டும் விதிவிலக்குக் கூடாது !


சோவியத் ரஷியாவிற்கு நான் சென்றபொழுது அங்கே முஸ்லிம்கள் வாழ்கின்ற ஒரு பகுதிக்குச் சென்றேன். இஸ்லாமிய மக்களைச் சந்தித்தேன். ஆனால் அங்கே சோவியத் குடியரசினருக்கு என்ன நடைமுறை, வரையறை வைத்திருக்கிறார்களோ, அதே நடைமுறை தான் இவர்களுக்கும் இருக்கிறது. மாற்றம் இல்லையென்பதை நான் கண்டேன். அவர்களும் இஸ்லாமியர்கள் தான், இங்கே இருப்பவர்களும் இஸ்லாமியர்கள்தான். மனம் உண்டானால் மார்க்கம் உண்டு என்பதைத்தான் சொல்வேன். அந்த மனதை உருவாக்கித் தீர வேண்டிய ஒரு மாபெரும் பொறுப்பு இங்கே இருக்கிற நம் அனைவருக்கும் உண்டு என்பதை நான் சொல்கின்றேன். ஆகவே, அவர்களை உணர வைக்க வேண்டுமே தவிர, அவர்கள் மனதைப் புண்படுத்த நாம் விரும்பக் கூடாது. அதைச் செய்யாமலே திருத்த வேண்டும்— திருந்தச் செய்ய வேண்டும்—அவர்கள் தாங்களாகவே திருத்திக் கொள்ளக் கூடிய நிலைமையை நாம் உருவாக்க வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்திற்குத்திட்டம் என்றால், இந்துக்களுக்கு மட்டுமல்ல—கிறிஸ்தவர்களுக்கு மட்டும் அல்ல-இஸ்லாமிய மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களுக்கும்—நம்புகின்றவர்கள் அனைவருக்கும்—ஜாதி இல்லாவிட்டாலும், ஜாதியிலே நம்பிக்கை வைத்திருக்கிற யாராவது சிலர் இருந்தாலும்கூட அவர்களுக்கும் சேர்த்துத்தான் திட்டங்களை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டம் முழுவதிற்கும் அமுலுக்கு வருவது அப்படித்தான். அப்படி இருக்கும்போது ஒருசிலர்— ஒருபகுதியினர்—ஒரு மதத்தினர்—ஒரு ஜாதியினர் என்று இவர்களுக்கு மட்டும் தனி விதிவிலக்கு என்பது நிச்சயமாக இருக்கக் கூடாது.

அப்படி இருந்தால் நாம் எவ்வளவுதான் சொன்னாலும், அடுத்தவர்கள் கேள்வி கேட்பார்கள். அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்தால், இந்த நாட்டிலே ஜனத்தொகை அதிகமாகாதா ? எங்களுக்குக் குழந்தை பிறந்தால் மட்டும்தானா ஜனத்தொகை அதிகமாகும் என்று கேட்பார்களானால், நாம் என்ன பதில் சொல்வோம் ? நமக்குப் பதில் சொல்ல வேண்டிய சக்தியும் இருக்க வேண்டும். நமக்கு ஆதாரம் இருந்தாக வேண்டும்—நியாயம் இருந்தாக வேண்டும்—கொஞ்சம் துணிச்சலும் இருந்தாக வேண்டும்.

வெறும் தேர்தலை நினைத்துச் செயல்படக் கூடாது. அடுத்ததேர்தலில் — மக்களிடம் வாக்குகளைக் கேட்கின்ற அந்தச் சமயத்திலே, நம் நிலைமை என்ன என்பதைத் தயுவுசெய்து சிந்திக்காதீர்கள். நாம் அப்படிச் சிந்திக்க வேண்டாம். நான் சிந்திக்கத் தயாராக இல்லை. தேர்தல் எப்படியோ, அதைப்பற்றி மக்கள் முடிவெடுக்கட்டும். நாம் ஒட்டுமொத்தமாகக் கடமையைச் செய்யும்போது எதற்கும் அஞ்சாமல் உண்மையைச் சொல்கின்றவர்களாக—நியாயத்தை எடுத்து வைக்கின்றவர்களாக இருக்க வேண்டும். அப்படி எடுத்து வைக்கும்போது யார் மனதையும் புண்படுத்தாமல், கூடியவரையில் அவர்களை நம் பக்கத்தில் ஈர்க்கக் கூடிய அளவு சாமார்த்திய சாலிகளாகவும், திறமை மிக்கவர்களாகவும், நல்ல உள்ளம் கொண்டவர்களாகவும் உரையாற்றி, நம்முடைய பேச்சு மூலம் அங்கே வெற்றி கிட்டச் செய்ய வேண்டும்.

இதை நான் சொல்லும்போது, நான் மிகமிகப் பெருமைப் படுகிறேன். அந்தக் குழுவிற்குத் தலைமை வகிக்கின்ற நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு ஹாஜா ஷெரீப், அவர்கள் அடக்கம், விட்டுக் கொடுத்தல், அன்போடு பழகுதல், நேர்மையோடு, நாணயத்தோடு பேசுதல், கண்ணியமான தொடர்புகள் என்று இந்த அளவில் அவர் இருக்கிற காரணத்தால், நிச்சயமாக அவர் வெற்றி பெறுவார். தமிழகத்தில் நம்முடைய ஒத்துழைப்பு அவருக்கு முழுமையாக இருக்கும். இந்த அரசு அவருக்குத் துணை நிற்கும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.



மாநாட்டில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்.

ஒரு வீட்டிலே மாற்றம் ஏற்பட்டால்கூட அந்த ஊரிலே அந்த மாற்றம் பிரதிபலிக்கும். அந்த ஊர், அந்த மாநிலம் என்று வருமானால், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் வெற்றிபெறும் என்பதைக் குறிப்பிட விருப்புகிறேன்.

ஒரு குழந்தை பெற்றுவிட்டால், அந்தக் குழந்தைக்கும், தாய்க்கும் கேடு இல்லாமல் நல்ல சுமுகமான முறையில் குழந்தை பெற்றுவிட்டார், அந்தத் தாய் என்றால் பாராட்டுகிறார்கள். மற்ற குழந்தைகளை விடச் சுத்தமாக அவர்கள் தங்கள் குழந்தையை வைத்திருக்கிறார்கள் என்று பாராட்டுகிறோம். அந்தக் குழந்தை படித்துப் பட்டம்வாங்கி, உத்தியோகம் பெற்று, அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற நேரத்தில்தான் அது பாராட்டுதலுக்குரிய குழந்தை என்று சொல்வதைப் போல், இன்றைய தினம் நாம் குடும்பநலத்திட்ட நிறைவேற்றத்தில் வெற்றி பெற்று நாட்டில் முன்னால் நிற்கிறோம் என்றால், அதை நிலைநிறுத்தும் அளவுக்கு நாம் தொடர்ந்து பணியாற்றி வெற்றி பெற்றாக வேண்டும்.



## தியாகத்திற்குப் பலன் நட்டமா ?

நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் தலைவராக இருந்து பணியாற்றுகின்ற நமது மதிப்பிற்குரிய தலைவர் அவர்கள் கவனத்திற்காக ஒன்றைச் சொல்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் முதலிலேயே சொல்லிவிட்டார்கள் என்றாலும் சொல்கிறேன். தமிழகத்திற்குப் பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 41 ஆக இருந்தது, 39 ஆக மாறி விட்டது நாம் செய்த தியாகத்தால். தியாகத்திற்கு நட்டம் பலனாக இருக்கக் கூடாது. தியாகத்திற்கு இலாபம் கிடைத்தாக வேண்டும். எங்கே குடும்பநலத் திட்டம் வேகமாக, நியாயமாக நடைபெறுகிறதோ, அங்கே நடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாக்கப்படும் என்று சொன்னால், (பலத்த கரவொலி) அந்த வகையிலாவது மற்றவர்கள் தாங்களாகவே முயற்சி எடுத்து-அக்கறை எடுத்து பணியாற்றி, அதிலே ஒரு நல்ல விளைவு ஏற்படுத்துவார்கள் என்று, நாம் அவர்களைக் கேட்கவோ, வேண்டவோ முடியும் என்று நான் கருதுகிறேன்.

அந்த இரண்டு இடங்களையும் நாம் வாங்கியே ஆக வேண்டும். 39 இடத்தை 41 இடமாக ஆக்கியே தீர வேண்டும். அது நம்முடைய உரிமை. நாம் நம்பி மக்கள் தொகையைக் குறைத்தோம். அதற்குப் பலன் 2 இடங்கள் போய்விட்டன. அது கூடாது. அது கிடைக்க வேண்டும். இப்போது 4 கோடியே 80 லட்சம் பேர்கள், ஏறத்தாழ 5 கோடிக்கு வந்து விட்டோம். இருந்தாலும் பழையபடி 41 இடமாவது கிடைத்தே ஆகவேண்டும். ஜனத்தொகையை அதிகமாக ஆக்கிய மற்ற மாநிலங்களுக்கு குறைத்தே ஆகவேண்டும்.

## வீராங்கனைப் பட்டம்

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். பலவந்தம், அச்சுறுத்தல் இவை கூடாது என்று ஒத்துக் கொள்கிறேன். இரஷ்யா போன்ற நாடுகளிலே குழந்தைகள் அதிகமாகப் பெற்றால் வீராங்கனை என்று பெயர் கொடுக்கிறார்கள்—பட்டம் கொடுக்கிறார்கள். வசதிகள் செய்து கொடுக்கிறார்கள். நாம் அதிகமாகக் குழந்தைகள் பெறாமால் இருக்கும் தாய்மார்களுக்கு வீராங்கனை என்று ஏன் பட்டம் கொடுக்கக் கூடாது ? அதிலும், குழந்தைகளைப் பெற்று ஒழுங்காக வளர்க்கிற அவர்களுக்கு ஏன் அந்த வாய்ப்பைக் கொடுக்கக்கூடாது? அதைச் செய்யத் தமிழக அரசு சிந்திக்கிறது என்பதைத் தான் சொல்ல முடியுமே தவிர, வேறு எதுவும், பேரவை நடக்கும்போது சொல்ல முடியாது—சொல்லவும் கூடாது.

ஆகவே இது போன்றவைகளை நாம் செய்ய வேண்டும். எங்கெங்கு இப்படிப்பட்டவர்கள், அக்கறையோடு குடும்பநலத் திட்டத்தைத் தாமாகவே ஏற்றுக் கொண்டு, உடல்நலம் கெடாதவாறு, குழந்தைகளை அறிவு வளரும் வகையில் வளர்ப்பதில் ஈடுபடுகிறார்களோ, அந்தக் குடும்பங்களுக்கு ஏதாவது சிறப்புச் சலுகைகளைத் தந்தாக வேண்டும். குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு, எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இந்தச் சலுகைகள் மட்டுமல்ல, இருக்கிற வசதிகளும் குறைக்கப்படும் என்ற நிலைமை ஏற்பட்டால் ஒருவேளை மாற்றம் காணமுடியும் என்று நான் கருதுகிறேன்.

இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெறுகின்ற குடும்பத்தில் உள்ள அந்த இரண்டு குழந்தைகள், பெற்றோர்களுக்கு மட்டுமே ரேஷன் கொடுக்கப்படும். அதற்குமேல் ரேஷன் கிடையாது என்று சொல்லுங்கள், என்ன ஆகும்? அவ்வளவுதான் கொடுக்க முடியும். அதற்குமேல் குழந்தைகளைப் பெற்றால் ரேஷன் கிடையாது—உணவு கிடையாது—அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடையாது என்று சொன்னால், அதைவிட தண்டனை வேறு இருக்க முடியாது. அந்த அளவுக்குக் கூடப் போக வேண்டுமென்று மக்கள் விரும்பினால், அதை மாநில அரசானாலும் சரி, மத்திய அரசானாலும் சரி, கவனிக்க வேண்டும். ஏதாவது ஒரு வகையில் நாம் கொஞ்சம் திடமாக முன்னேறியாக வேண்டும்.

ஏதோ பயமுறுத்தக் கூடாது, வற்புறுத்தக் கூடாது என்று சொல்கிறார்கள். சரி. இது பயமுறுத்தல் இல்லை. இருக்கிற உணவை இரண்டு குழந்தைகளுக்குத்தான் பங்குபோட முடியும். அதற்குமேல் அங்கே இருப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றால் இல்லை. இந்நிலை இருந்தால் எப்படி அவர்களுக்குக் குழந்தைகளைப் பெறத் துணிவு வரும் ? வீட்டு நிலம் கொடுங்கள், பட்டா மனை கொடுங்கள், தொழில் கொடுங்கள், உணவுப் பொருள் கொடுங்கள், அத்தியாவசியமான பொருள்களைப் பாதி விலைக்குக் கொடுங்

உத்திரப் பிரதேச நல்வாழ்வு—குடும்ப நலத்துறை உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று, தமிழகத்தின் பல இடங்களுக்கெல்லாம் சென்று பார்த்தது. அக்குழுவினர் அரசு தலைமைச் செயலகத்தில் நல்வாழ்வு—குடும்ப நலத் துறைச் செயலர் திரு. எஸ். பி. அம்புரோஸ் அவர்களுடன் கலந்துரையாடினர்.



கள் என்று எல்லாம் கேட்கின்றார்கள். நீ அந்த அளவுக்கு வா என்றால், மதம் குறுக்கிடுகிறது—உடல்—நிலை குறுக்கிடுகிறது—சூழ்நிலை குறுக்கிடுகிறது—கடவுள்தான் குறுக்கிடுகிறார் என்றால் அதற்கு என்ன முடிவு? ஆகவே, தயவுசெய்து கொஞ்சம் வேகமாகப் போக வேண்டுமென்பதைக் கூட நான் சொல்கிறேன். யாரையும் அச்சுறுத்திக் கொண்டு போய், பயமுறுத்திக் கொண்டு போய் சிகிச்சை செய்யக் கூடாது. திருமணம் ஆகாதவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்தார்கள் என்ற நடவடிக்கைகள் இருக்கக் கூடாது. அதைச் செய்யும் **அதிகாரிகளை** நாம் கட்டுப்படுத்த வேண்டும். நாம் **சொல்வதை** அதிகாரிகள் செய்வார்கள். சிலசமயம் **சொல்வோம்**, இந்தனை பேர்களைக் குடும்பநலம் ஏற்கச் செய்தால்தான் உங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும் என்று யாராவது சொல்லிவிட்டால், அந்த அதிகாரி என்ன செய்ய முடியும்? அவருக்கும் வாழ்க்கைப் பிரச்சினை. அவருக்கும் எவ்வளவோ பொறுப்புகள். அவர்கள் அதைச் செய்ய வேண்டி இருக்கிறது. ஆகவே சொல்கின்ற உணர்வுகள், உத்தரவுகள் ஒழுங்காக இருக்க வேண்டும்.

## வாக்குரிமை இல்லாமல் செய்தால் ...

வாழ்வதற்கு நமக்கு உரிமை இருக்கிறது என்று சொல்கிறார்கள். மற்றவர்கள் வாழ, தன்னைக் கட்டுப்படுத்தி, குடும்பத்தை அளவுபடுத்திக் கொள்வது சமுதாயக் கடமை என்று உணராதவர்களுக்கு வாக்குரிமை இல்லை என்று சொல்லுங்கள். இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெறுவார்களானால் அவர்களுக்கு வாக்குரிமை இல்லை என்று சொல்லுங்கள். வாக்குரிமை இல்லாதவர்கள் இந்த நாட்டில் அனாதைகள்—ஒரு நாட்டின் குடிமகன் அல்ல. இதைவிடத் தண்டனை வேறு என்ன வேண்டும். இது தண்டனை இல்லையா? அவர்களைத் துன்புறுத்த வில்லை. ஆகவே, இவை போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும். இவ்வளவு தான் என்று நான் சொல்லவில்லை. என்னைவிட விவரம் தெரிந்தவர்கள் இருப்பார்கள். அவர்கள் கூடி முடிவு செய்தாகவேண்டும்.

எனக்கு இதைப் பற்றிப் பல எண்ணங்கள் உண்டு. என்னைப் பொறுத்தவரை எந்தப் பிரச்சினையும் கிடையாது என்று சபாநாயகர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். எனக்கு இரண்டு குழந்தைகள் இருந்திருக்க வேண்டும். ஒன்று பாதி, ஒன்று அறுவை சிகிச்சைக்குப்பின்—ஆக இரண்டும் இல்லாத நிலை ஏற்பட்டு விட்டது. பிறகு குழந்தை வேண்டவே வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு குழந்தைகள் தோன்றி இரண்டும் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிட்ட பிறகு, நானும் என் மனைவியும் ஆக இரண்டு என்ற நிலைமைக்கு வந்துவிட்டோம். இப்படித்தான் எல்லோரும் இருக்க வேண்டுமென்று சொன்னால் அதைவிட அறிவீனம் இருக்க முடியாது. ஒவ்வொருவருக்கும் குழந்தைகள் இருந்தாக வேண்டும். அவை உடல் நலத்தோடு இருக்க வேண்டும்; நல்ல அறிவுத் தெளிவோடு இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் ஓரளவுக்காவது அவர்களுக்குத் தேவையானவற்றைப் பெற்று வாழக் கூடிய நிலைமையில் இருந்தாக வேண்டும்.

முன்பெல்லாம் பெண்கள் வேலைக்குப் போகக் கூடாது என்று சொல்லிக் கொண்டிருந்த காலம் இருந்தது. அது வெகு அண்மைக் காலத்தில் மாறி விட்டிருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. முன்பு கூட ஒரு முறை சொன்னேன்—மீண்டும் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் ஆட்சிக்குவந்து குறைந்தது ஒன்றரை மாதம் இருக்குமென்று நினைக்கிறேன், சில ஏழைகள் உழைக்கின்ற மக்கள் வேலை கேட்டுவந்தார்கள். ஒரு சகோதரி அழுது கொண்டே சொன்னார்—எங்களை எல்லாம் நிரந்தரமாக்காமல் ஏதோ சேர்த்தார்கள் தற்காலிகமாக—இப்போது வேலை இல்லையென்று வெளியே விரட்டுகிறார்கள். இத்தனை ஆண்டு காலம் வேலை செய்துவிட்டோம். 26 வயதுக்குமேல் ஆகிறது; இனி எங்கேபோய் வேலை கேட்க முடியும் என்று கேட்டார்கள். அவர்கள் அவ்வளவு படித்தவர்கள் அல்ல. உழைப்பவர்கள். அவர்களுக்கு வேலைக்கு ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னேன். இன்னொரு சகோதரி அழுது கொண்டே இருந்தார். 'இந்தப் பெண்ணுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது; கணவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாப்பிள்ளையும் சம்மதித்து விட்டார்; ஆனால் வேலை போய்விடுகிறது என்று தெரிந்தவுடன் அந்தப் பெண் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்' என்று அவர் கூறினார். காரணம், தன்னுடைய வருமானத்தையும் பெண்ணுடைய வருமானத்தையும் கொண்டு குடும்பம் நடத்த முடியும் என்பது மாப்பிள்ளை கணக்கு. இப்போதுள்ள விலைவாசிச் சூழ்நிலையில் பெண்ணுக்கு வேலை இல்லை என்று சொன்ன பின், அந்தப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள முடியாது என்று சொல்லி விட்டார் என்றால் என்ன பொருள்?

## ஏற்கும் வகையில் சொல்வது அவசியம்

இன்றைக்கு வாழ்க்கைப் பிரச்சினையில் இவ்வளவு நெருக்கடி இருக்கும்போது, அப்படிப்பட்டவர்களுக்கு 'ஐந்தாறு குழந்தைகளும் பிறந்துவிட்டன என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டால் அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதைப் பற்றி எந்தெந்த வகையில் நாம் மக்களுக்குச் சொல்ல வேண்டுமோ அந்தந்த வகையில் மக்களுக்குச் சொல்லித் தீரவேண்டும். மக்களுக்குப் போய் இதைப் பற்றி சொல்ல வேண்டுமென்று சொல்லும்போது, படித்தவர்கள், விவரம் தெரிந்தவர்கள் மக்களுக்கு உறுதி கொடுத்து வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறோம் நாம். நமக்கே சில சமயம் 'போர்' அடிக்கிறது என்போம். அதைப்போல் சலிப்புத்தட்டும் பிரச்சினையாக இது இருக்கும்போது அதைப்பற்றி மக்களுக்கு எடுத்துச் சொன்னால் அவர்களுக்கு எப்படிப் பிடிக்கும்—எப்படி

*தில்லியிலுள்ள 'மக்கள் தொகை—வளர்ச்சிப் பணி' குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தைச் சார்ந்தோருடன், சட்டப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்களும், நல்வாழ்வுத்துறை அமைச்சர் எச். வி. அண்டே அவர்களும் கலந்துரையாடுகிறார்கள்.*





ஏற்றுக் கொள்வார்கள்—எத்தனை நேரம் உட்கார்ந்து கொண்டிருப்பார்கள் என்பதை எல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

சொல்லுகிற வகையில், புரிகிற வகையில், ஏற்றுக் கொள்கின்ற வகையில் நாம் எடுத்துக் காட்ட வேண்டும். நகைச் சுவையாக நல்ல நாடகங்களை நடத்தி மக்கள் மத்தியில் அதைப் பதிய வைக்க முயலலாம். நல்ல பாடகர்களைக் கொண்டு, கண்ணீர் விட்டுப் புலம்புகிற அளவுக்கு உள்ள அந்தப் பாடல்களை மக்கள் கேட்டு வீட்டுக்குப் போனால்கூட கண்ணீர் விடுகின்ற அளவுக்கு பாடல்களைப்பாடி, கருத்துக்களைச் சொல்லலாம் வீட்டிலுள்ள குழந்தைகள் முதற்கொண்டு அதைக்கேட்டு பாடுகின்ற அளவுக்கு இருக்க வேண்டும். அதன் மூலம் இந்தக் கருத்தினைப் பரப்பலாம். திரைப்படங்கள் எடுத்து அதன் மூலமாக இதை அவர்களுக்குப் புரியும்படி செய்யலாம். இதையெல்லாம் அரசும் செய்யலாம், தனிப்பட்டவர்களும் செய்யலாம்.

## வேண்டுகோள்

ஆனால் நம்மைப் போன்ற எம். எல். ஏ. க்கள், எம். எல். சி. க்கள், எம். பி. க்களுக்கு இதைவிட அதிகமான ஒரு பணி இருக்கிறது. நாம் ஏதோ மேடையிலே் பேசிவிட்டால் மக்கள் மாறிவிடுவார்கள் என்று தயவு செய்து எண்ணக்கூடாது. ஒவ்வொரு ஊரிலும் சில பகுதிகளைப் பிரித்து வைத்துக் கொண்டு அந்தப்பகுதியிலே தொடர்ந்து வீடு வீடாகச் சென்று இந்தக் குடும்ப நலத்திட்டத்தைப் பரப்புவோம் என்ற உறுதியை இந்த மாநாட்டிலே ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இதிலேபங்கு கொண்டிருக்கிறவர்களைப் பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கேயிருக்கிற உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்வது இதுதான். இங்கே விவாதம் நடைபெறவிருக்கிறது. ஏதோ ஒரு நிகழ்ச்சி நடந்தது. அத்தோடு போய்விட்டது என்றில்லாமல், நம்முடைய திறமை என்ன, நம்முடைய பொறுப்பு என்ன, நம்முடைய நிலைமைகள் என்ன என்பதை எல்லாம் தெரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும். நம்மை நம்பிக் கொண்டு வந்திருக்கிறவர்கள்—மற்ற மாநிலங்களிலேயிருந்து வந்திருக்கிறவர்கள் — இந்த மாநாட்டைத் தொடங்கி நடத்துகிறவர்கள், தமிழகத்தைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதையெல்லாம் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

*கும்மிடி பூண்டி ஊராட்சி ஈகுவார் பாளையத்தில் நடந்த கிராமத் தலைவர்கள் பயிற்சி முகாமில், சுகாதாரப் பார்வையாளர் திருமதி பார்வதி உரையாற்றுகிறார்.*





*இராசாசி மண்டபத்தில் நடந்த மக்கள் தொகை மற்றும் வளர்ச்சிப் பணி மாநாட்டில் நல்வாழ்வுத் துறை அமைச்சர் நன்றி உரையாற்றுகிறார்.*

## கட்டளை அல்ல வேண்டுகோள்!

நான் எல்லோருக்கும் கட்டளை போட முடியாது. வேண்டுகோள்தான் விடுக்க வேண்டும். வேண்டுகோளை விடுக்கிறேன். மாலை 5 மணி வரையில் நீங்கள் அனைவரும் இருந்து, இந்தப் பணிகளை நாம் சிறப்புற நிறைவேற்ற—அகில இந்திய அளவில் தமிழகம் ஓர் எடுத்துக் காட்டாக இருக்கிறது என்று எண்ணத்தக்க நிலையை உருவாக்கும் வகையில் பணியாற்ற வேண்டும்.

தமிழகத்திலேயிருக்கிற சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திறமையானவர்கள்—விவரம் தெரிந்தவர்கள் என்பதை இந்தமேடையிலே வாய்ப்பு கிடைக்கும்போது, அதைப் பயன்படுத்தி எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த விவாதங்களிலே பங்கு கொண்டு புள்ளி விவரங்களை—தெரிந்த விவரங்களை எடுத்துச் சொல்லி விவாதித்து, தெரியாத விவரங்களை கேட்டறிந்து, அதன்மீதும் விவாதித்து நல்ல முடிவுக்கு வந்து, அந்த முடிவை தயவுசெய்து எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். அதை வைத்துக்கொண்டு நானும் ஒரு கூட்டம் கூட்டி, அங்கே விவாதம் செய்து, அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும் கூட்டி, முடிவை எடுக்கலாம்.

அந்த வகையில் இந்த விவாதத்தில் பங்குகொண்டு அனைவரும் விவரங்களை எடுத்துச் சொல்லி, இந்தப் பிரச்சினை கட்சிக்கு அப்பாற்பட்டது என்பதை நிருபிக்க வேண்டும்; இந்தியத் துணைக் கண்ட அளவிலே, நல்ல கருத்துக்களை வழங்குகிற வகையில் அமைந்திருந்தது இந்த மாநாடு என்ற நல்ல பெயரை ஏற்படுத்தத்தக்க விதத்தில் ஒத்துழைப்பீர்கள் என்ற நம்பிக்கையை தெரிவித்து' உங்கள் எண்ணங்கள் வாழ்க-இந்தியத் துணை கண்டம் வாழ்க—தமிழகம் வாழ்க—அண்ணா நாமம் வாழ்க என்று சொல்லி, என் தலைமை உரையை முடித்து விடைபெறுகிறேன் நான்.

# சிறுகுடும்ப எண்ணத்தைப் பரப்புவதே மிக மிக முக்கியமான வேலையாகும் !

## நல்வாழ்வு-குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. அண்டே

[இந்தியத் தொழில் அதிபர்கள் சங்கத்தின் தென் இந்தியக் கிளை, சென்னை அசோகா ஓட்டலில் 22—7—1981 ஆம் நாள் தொழிலாளர்களுக்கென நடத்திய மக்கள் தொகையியல் கல்விக் கருத்தரங்கைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.]

இன்றைக்கு ஒரு சிறப்பான நிகழ்ச்சியைப் புதுமையாக இங்கே நடத்திக் கொண்டிருக்கிறோம்; வழக்கமாக மருத்துவ இலாகாவிலே இருக்கின்ற குடும்பநல விளம்பரத் துறையினர் எப்படியெல்லாம் குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்தவேண்டுமென்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். நாமும் சேர்ந்து சொல்லி வருகிறோம். ஆனால் வழக்கத்திற்கு மாறாக இங்கே நல்ல முறையில் மக்கள் தொகை இயல் கல்வி அளிக்கும் திட்டத்தைத் தொழிலதிபர்களின் சங்கத்தினர் (Population Education Project) நடத்துகிறார்கள்.

தொழிற்சாலையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு யார் சொன்னால் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களோ அப்பேர்ப்பட்ட தலைவர்களை எல்லாம் இந்தக் கருத்தரங்கிற்கு அழைத்து—அதற்குச் சிகரம் வைத்தாற்போல் மதிப்பிற்குரிய தொழிற்சங்கத் தலைவரும், மத்திய தொழிலாளர் கல்வி வாரியத் தலைவருமான திரு. ஜி. ராமானுஜம் அவர்களையும் இங்கே அழைத்துக் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளக்கூடிய வாய்ப்பினைத் தந்து இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுக்களை இந்த முக்கியமான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கின்ற அத்தனை நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கின்றேன்.




இந்தியத் தொழில் அதிபர்கள் சங்கம் சென்னை அசோகா ஓட்டலில் தொழிலாளர்களுக்கென நடத்திய மக்கள் தொகையியல் கல்விக் கருத்தரங்கில் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. அண்டே அவர்கள் உரையாற்றுகிறார்.

நாம் குடும்பநலத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இது பற்றி என்னிடம் ஒரு மாவட்ட அலுவலர் சொன்னார். நம்முடைய புள்ளி விவரம் பரவாயில்லை என்று—நம்முடைய பணி இந்தத் துறையைப் பொறுத்த அளவில் நன்றாக இருக்கிறதென்று. Never risk to your work என்று அவரிடத்தில் சொன்னேன். மற்ற மாநிலங்களை விட நாம் நன்றாக வேலை செய்து இருக்கிறோம் என்று ஜம்பம் அடித்துக் கொண்டோ, தம்பட்டம் அடித்துக் கொண்டோ, நாம் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்வோமேயானால், குழந்தைகள் பிறக்கக் கூடிய விகிதத்திலே ஓய்வு இருக்காது. ஆகவே இது ஒரு முக்கியமான விஷயம் என்று நான் சொன்னேன். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் பரவாயில்லை என்ற நிலைமை இருக்கிறது. பரவாயில்லை என்று, அதாவது மற்ற மாநிலங்களை விடப் பரவாயில்லை என்ற நிலை தமிழகத்தில் இருக்கிறது. இந்த நிலைமை இருப்பதற்கு என்ன காரணம் என்றால் நம்முடைய குடும்பநலத் துறையினுடைய வேலைகள் ஒரு பக்கத்திலே நடந்து கொண்டிருந்தாலும் கூட, அதிலே முக்கியமானபணி ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. பல இடங்களிலே நான் பேசியிருக்கிறேன். டெல்லியிலே நான் பேசியதை டாக்டர் தாக்கர் கேட்டு இருப்பார் என்று நம்புகிறேன்—அந்த முக்கியமான பணி என்ன என்பது குறித்து என்னுடைய கருத்தை நான் சொல்ல விரும்புறேன்.

முழுக்க முழுக்க இப்படிப்பட்ட கருத்தரங்குகள் நம்முடைய நாட்டுக்குத் தேவை என்பதற்கான கருத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். குழந்தைகளுடைய பிறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கு Limiting the Birth Rate என்று சொல்லுவார்கள். அதற்கு முக்கியமான Ingredient என்னவென்றால் அறுவைச் சிகிச்சை செய்வது ஒரு பக்கத்திலே இருந்தாலும் கூட, அறுவைச் சிகிச்சை தேவை—ஆண் அறுவைச் சிகிச்சை தேவை—பெண் அறுவைச் சிகிச்சை தேவை. எல்லாவற்றையும் விட எது முக்கியமானது என்றால் மிக முக்கியமானது என்றால்—மக்கள் மத்தியிலே ஒரு எண்ணத்தைப் பரப்புவது தான் மிக மிக முக்கியமான ஒரு அம்சமாக இருக்கிறது. ''சிறு குடும்ப நெறியை'' மக்கள் ஏற்குமாறு செய்வது தான் —மக்களுடைய மனத்திலே ஒரு மாற்றத்தை உருவாக்கி இந்த நெறியை ஏற்கச் செய்வது தான் மிக மிக முக்கியமான பணியாகும். இத்தகைய எண்ணத்தை பரப்புவதன் மூலமாக நமக்குக் கிடைக்கக் கூடிய வெற்றியை ஒரு தராசிலே வைத்து; நாம் மூழு மூச்சாகக் குடும்ப நல அறுவை சிகிச்சைகள் செய்கின்றோம் — அதைச் செய்கிறோம்—இதைச் செய்கிறோம்என்று சொல்லி அதைப்பயங்கரமான விகிதத்திலே பரப்புவதை இன்னொரு தராசிலேவைப்போமேயானால், நான் முதலிலே சொன்ன தராசு தான் எனக்கு முக்கியமானதாகப் படுகிறது. அத்தகைய கருத்தை மக்களிடையே பரப்புவோமேயானால்நிச்சயமாக நமக்கு வெற்றி கிட்டும்.

### இருமாவட்டங்களின் எடுத்துக் காட்டு

ஒரு உதாரணத்தைச் சொல்லுகிறேன். நம்முடைய தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்கள் இருக்கின்றன. இதிலே இரண்டு மாவட்டங்களை உங்களுக்கு எடுத்துக் காட்டுகிறேன். திருநெல்வேலி மாவட்டம் இருக்கிறது. —மதுரை மாவட்டம் இருக்கிறது. மதுரையிலே காந்திக் கிராமம் என்று ஒரு இடம் இருக்கிறது. அந்த இடத்திலே மிக அருமையான வகையிலே அறுவைச் சிகிச்சை செய்து வருகிறார்கள். நாம் நம்முடைய நிதி உதவியை எல்லாம் கொடுத்து வருகிறோம். அதை விட அங்கே இருக்கக் கூடிய ஒரே ஒரு டாக்டர் அம்மா முழுத் திறமையுடன் அங்கே அறுவைச் சிகிச்சை செய்து வரக்கூடிய பொது மக்களுடன் அன்போடு எளிமையாகப் பழகி, அரவணைத்துக் கொண்டு, அவர்களுக்கு நல்ல வகையில் ஆலோசனைகள் சொல்லி, சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்கள். இந்த இலாக்கா, மதுரை மாவட்டத்திற்கு தந்துள்ள இலக்கை அடையக்கூடிய அளவிற்கான அந்த நல்ல இடத்தை அந்த டாக்டர் பணியாற்றுகின்ற நிறுவனம் பெற்று இருக்கிறது. ஏனென்றால் காந்தி கிராமம் பகுதியிலே செய்யப்படுகின்ற அறுவைச் சிகிச்சைகள் காரணமாக மதுரை மாவட்டம் குடும்பநல அறுவைச் சிகிச்சை இலக்கை எட்டுவதிலே முன்னோடியாக இருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டம், குடும்பநல அறுவைச் சிகிச்சைத் திட்டத்தைநிறைவேற்றுவதில், மதுரை மாவட்டம் அடைந்த அளவு வெற்றியை அடையவில்லை. ஆனால் பிறப்பு விகிதத்தை எடுத்துக் கொண்டு பார்ப்போமேயானால்—மக்கள் தொகை வளர்ச்சி என்ற அளவிலே பார்ப்போமேயானால் திருநெல்வேலி மாவட்டம் மதுரை மாவட்டத்தை விட முன்னணியிலே இருக்கிறது. Decennial Growth Rate (1971—81) Tirunelveli District 11.21·/.; Madurai District 15.03·/. ஒரு இடத்திலே அறுவைச் சிகிச்சை நன்றாக இருக்கிறது—மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற நிலை இரண்டாம் தரமாக இருக்கிறது. இன்னொரு இடத்திலே குடும்பநல அறுவைச் சிகிச்சை நிறைவேற்றம் இரண்டாம் தரமாக இருக்கிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற அந்தப் பணி முதலிடம் வகிக்கிறது. எதனாலே இப்படி ஒரு தலைகீழான ஒரு நிலை மாவட்டங்களிலே இருக்கிறது என்று நாம் ஒரு ஆராய்ச்சி நடத்த வேண்டும். இதை நான் டெல்லியிலே கூட குறிப்பிட்டேன். அப்படி நான் பார்க்கின்ற நேரத்தில் மிக அதிசியமான அற்புதமான உண்மை அங்கே கிடைக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலே கற்றவர்களின் எண்ணிக்கை அதிகம். சொல்லும் விவரங்களைப் புரிந்து கொள்ளக் கூடிய மக்கள் அந்த இடத்திலே அதிகம் வாழ்கிறார்கள் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் பார்ப்போமேயானால், கற்றவர்களின் எண்ணிக்கை (Literacy Rate (1981) Tirunelveli 50.79·/· Madurai 46.58·/.) மதுரை மாவட்டத்தைவிட அதிகமாக இருக்கிறது. அது மட்டுமல்லாது குடும்பநலப் பிரச்சாரம் அங்கே நன்றாக இருக்கிறது. ஆகவே பிரச்சாரத்தினுடைய அடிப்படையிலே மக்களுக்கு எடுத்து விளக்குவதன் மூலமாகத்தான் நாம் அடையக் கூடிய இலக்கு, மிக நல்ல இலக்காக—பாராட்டக்கூடிய இலக்காக இருக்குமே தவிர, இத்தனை அறுவைச் சிகிச்சைகள் செய்து விட்டோம் என்பது ஒரு முக்கிய கூறாக இல்லையென்பதை மிகத்தெளிவாக சொல்வதற்காகத் தான், நான் இவ்வளவு விவரங்களைக் கூறி இருக்கின்றேன்.



தென் இந்திய தொழில் அதிபர்கள் சங்கத் தலைவர் திரு என். வெங்கட்ரமணி, கருத்தரங்கில் உரையாற்றுகிறார்.

ஒரு விஷயத்தைப் பார்க்கவேண்டும். தில்லியிலேகூட இந்தச் சர்ச்சை ஏற்பட்டது. தில்லியிலே நான் இரண்டு முறை பேசி இருக்கின்றேன். ஒரு முறை நாடாளு மன்ற உறுப்பினர்களையெல்லாம் அழைத்துப் பேசினார்கள். அந்தக் கூட்டத்தில் பேசக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது.. அப்போது தமிழ்நாட்டிற்கு மிகவும் மரியாதை கொடுத்தார்கள். ஏனென்றால் அகில இந்தியாவிலே கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாட்டில்தான் மக்கள் தொகை வளர்ச்சியை 17.23 என்று கொண்டு வந்திருக்கிறோம். அவ்வளவு பேரும் நம்மைப் பாராட்டியிருக்கின்றார்கள். இரண்டாவது கேரளா 19.00 என்று இருப்பதாக நினைவு.

இதிலே இருக்கின்ற முக்கியமான விஷயத்தை, ஒரு நுணுக்கத்தை நாம் தெரிந்து கொண்டாக வேண்டும். ஏனென்றால் இந்தக் கருத்தரங்கிலே கலந்து கொண்டிருக்கின்றவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. இதிலே கலந்து கொண்டிருக்கின்ற ஒவ்வொருவரும் நூற்றுக் கணக்கான—ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் மத்தியிலே எடுத்துச் சொல்லி இந்தக் கருத்துக்களை பரப்புவதன் வாயிலாக அந்தத் தொழிலாளர்கள் உங்களை மதிப்பார்கள்.

### எவர் சொல்வதைக் கேட்கிறார்கள்?

உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். என்னுடைய மருத்துவ நிலையம் இருக்கிறது. நான் அங்கே உட்கார்ந்துகொண்டு ஒரு டாக்டர் என்றமுறையில் எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில் அங்கே வருகின்ற தாய்மார்கள் உடனடியாக கேட்கின்றார்கள். ஆனால் அதை நல்வாழ்வுத் துறை அமைச்சர் என்ற முறையில் சொல்லுகின்ற நேரத்தில், இது அமைச்சருடைய வேலை. ஆகையினால் தான் சொல்லுகின்றார் என்று கருதுகின்றார்கள். குடும்பநலத் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்ல

வேண்டியது அவரது துறையைச் சார்ந்த கடமை போலும். ஆகையினாலே எடுத்துச் சொல்லுகின்றார் என்று கருதுகின்றார்கள். அதே நேரத்தில் மருத்துவராக உட்கார்ந்து கொண்டு, வருகின்ற தாய்மார்களிடத்திலே ஏன் மூன்று குழந்தைகளை பெற்றுக் கொண்டாய் — உடல்நலம் கெட்டுவிடும் — குழந்தைகளின் நலனைப் பாதுகாக்க இதுவரை குழந்தைகளை பெற்றுக் கொண்டது போதும் என்று எடுத்துச் சொல்கிற போது, அவர்கள் தங்களது குடும்ப டாக்டரே தங்களுக்கு அறிவுறுத்துவதாகக் கருதுகிறார்கள். அத்தகைய எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. நாம் சொல்லக் கூடிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நிலையும் அவர்களிடையே ஏற்பட்டு விடுகிறது. நமக்கு ஒரு பிரச்சாரப் படையே இருக்கிறது. இதற்கென்று குடும்பநல விளம்பர அலுவலர் என்று மாவட்டத்திலே அதிகாரிகள் இருக்கின்றார்கள். அவர்கள் சொல்லுகின்ற நேரத்திலே தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, மற்றவர்களானாலும் சரி, அவர்கள் என்ன நினைக்கின்றார்கள்? இந்தக் குடும்பநலத் துறையிலே இவர்கள் வேலை செய்கிறார்கள் அவர்கள் இது போன்று எடுத்துச் சொன்னால் தான் அவர்களுக்குச் சம்பளம் கிடைக்கும்—அதனாலே சொல்லுகின்றார்கள் என்று கருதுவார்கள்.

இந்தக் கருத்தரங்கிலே கலந்து கொண்டுள்ள தொழிலாள ஆசிரியர்களான நீங்கள் அப்படி இல்லை. நீங்கள் போய் சொல்லுகின்ற நேரத்தில் நம்முடைய சக தொழிலாளி—நம்முடைய உடன் பிறப்பு—நமக்காகத் தொழிற் சங்கத்திலே வாதாடக் கூடியவர்கள் —நம்மிடையே இருந்து பணியாற்றக் கூடிய தொழிலாளி சொல்லுகிறார். ஆகவே இந்தத் திட்டத்திலே ஏதோ ஒரு உண்மை இருக்கும். ஒரு அதிகாரி சொல்வதன் மூலமாகவோ அல்லது அவர்களுக்குக் கீழே பணியாற்றுகின்றவர்கள் சொல்லுகின்றபோது, ஏற்படுகின்ற நம்பிக்கையை விட உங்களைப் போன்ற தொழிலாளர், ஆசிரியர்கள் இந்தத் திட்டத்தை எடுத்துச் சொல்லும் போது தொழிலாளர்களுக்கு இந்தத் திட்டத்தின் பால் அதிகமான நம்பிக்கை ஏற்படும். தொழிற்சங்கத்தினுடைய தலைவர் சொன்னால், அதை அந்தத் தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்வார்கள். அதற்காக நியமித்து இருக்கும் அரசாங்கத்தினுடைய ஊழியர்கள் சொன்னால் அதை அவர்கள் அலட்சியமாக விட்டு விடுவார்கள். இது ஒரு பெரிய முக்கியமான பிரச்சினை.

நான் கூட இன்றைய நிகழ்ச்சியிலே கலந்துகொள்ளுகின்ற வாய்ப்பு இருக்குமோ என்ற ஐயப்பாடு கொண்டிருந்தேன். நேற்றைய தினம் நம்முடைய தலைவர், முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கோவையில் பேசிக் கொண்டிருக்கின்ற போது இரவு 12 மணி ஆயிற்று. இருந்தாலும் கூட அங்கே சொல்லி விட்டு இந்த மாதிரி நிகழ்ச்சிக்கு வரவேண்டுமென்று கூறிவிட்டு வந்திருக்கின்றேன். இது ஒரு முக்கியமான நிகழ்ச்சி. ஒரு பொதுக் கூட்டமாக இருந்தாலும் சரி அதை ஒத்தி வைத்துவிட்டிருப்பேன். ஆனால் இது ஒரு முக்கியமான நிகழ்ச்சி என்ற காரணத்தினால் தான் கலந்து கொண்டிருக்கின்றேன். தொழிற்சங்கத்திலே இருக்கின்றவர்கள், தொழிலாளர்களின் நண்பர்கள் இங்கே வந்திருந்து நீங்கள் செய்யக் கூடிய இந்தப் புனிதமான காரியத்திற்கு அரசாங்கம் உங்களுக்கு நன்றி செலுத்துகிறது. —அரசாங்கம் இதற்காக உங்கள் பக்கம் இருக்கிறது என்பதனை எடுத்துச் சொல்வதற்காகவே நான் இந்த விழாவிலே வந்து கலந்து கொண்டிருக்கின்றேன். இதை எடுத்துச் சொல்வதற்குக் கூட நான் வரவில்லையென்றால் என்னுடைய கடமையிலேயிருந்து நான் தவறி விட்டதாக ஆகிவிடுமே என்ற காரணத்தினால் தான் இங்கே வந்திருக்கின்றேன்.

## நரமான வாழ்வு

தொழிலாளத் தோழர்கள் மத்தியிலே இந்தத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும் போது முக்கியமாக இரண்டு மூன்று கருத்துக்களைப் பரப்பியாக வேண்டும். மத்திய அரசிலே இருக்கக் கூடிய நம்முடைய மதிப்பிற்குரிய பிரதமர் திருமதி இந்திரா காந்தியாக இருந்தாலும் சரி —மத்திய அரசினுடைய நல்வாழ்வுத் துறையாக இருந்தாலும் சரி — தமிழகத்தினுடைய நல்வாழ்வுத் துறையாக இருந்தாலும் சரி, ஒரு முக்கியமான மாறுதலோடு இத்திட்டத்தை இப்போது நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இத்தனை நாட்களாக எதைச் சொன்னோம் — நீங்கள் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவில்லையென்றால் ஆண்டுதோறும் ஒரு ஆஸ்திரேலிய நாட்டு மக்கள் தொகை அளவு பெருக்கம் இந்த நாட்டிலே ஏற்படும். அத்தகைய மக்கள் தொகையியல் நிலையை விவரித்து வந்திருக்கிறோம். நம்முடைய பிரதமர் அவர்கள் அதைத்தான் கோடிட்டு காட்டியிருக்கின்றார்கள். மிக பயங்கரமான புள்ளி விவரத்தைக் காட்டியிருக்கின்றார்கள். 60 கோடி மக்கள் தொகை என்பது எங்கே இருக்கிறது. 100 கோடி எங்கேயிருக்கிறது மக்கள் தொகைப் பெருக்கத்தை நாம் கட்டுப்படுத்தவில்லையென்றால் கி. பி. 2000-ல் 100 கோடி மக்கள் தொகை இங்கே ஏற்படும் என்கிறார்கள். ஒரு பெருத்த மனமாற்றம் உருவாவதற்கு வாய்ப்பே இல்லை. அதாவது இந்தச் சிறு குடும்ப நெறியை ஏற்க வேண்டிய இந்த நாட்டிலே, 60 கோடி மக்கள் தொகை இருந்தால் என்ன-100 கோடி மக்கள்தொகை பெருகினால்தான்என்ன-அதனால் நமக்கு என்ன லாபம் அல்லது நட்டம் என்று ஒரு நினைப்பு ஏற்படும். ஆகையினாலே அதிலே நாம் ஒரு மாறுதலைச் செய்திருக்கிறோம். தமிழகத்திலே மற்றவர்கள் கூட இதைத்தான் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அப்படி நாம் என்ன செய்திருக்கிறோம்?

இரண்டு குழந்தைக்குப் பதிலாக நீங்கள் மூன்று அல்லது நான்கு குழந்தைகளைப் பெற்றுக் கொள்வீர்களேயானால் உங்களது உடலுக்கு ஏற்படுகின்ற சேதம் என்ன? தரமான கல்வி, தரமான வாழ்க்கை, கொடுக்க இயலாத, அந்தத் துர்பாக்கியமான நிலைக்கு உங்கள் குழந்தைகள் ஆளாகின்ற தன்மையைப் பற்றி நீங்கள் எண்ணிப் பார்த்தீர்களா? விவரம் தெரிந்தவர்கள், கல்வி கற்றவர்கள், முதலாளிகள் என்று சொல்லப்படுகின்றவர்கள் நம்மைப் போன்றவர்கள் எல்லோரும் எச்சரிக்கையாக இருக்கின்றோம். ஆகவே நம்மைப் போன்றவர்கள் அந்த விவரங்களைத் தெரிந்து கொண்டு மிகச் சாமார்த்தியமாக ஒரு குழந்தை அல்லது இரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு, எல்லா வாழ்க்கை வசதிகளையும், அமைத்துக் கொள்வதோடு, நல்ல கல்வி, தரமான சத்துணவு, நல்ல வாழ்க்கை வசதி ஆகியவற்றைப் பெற்று வருகிறோம். நல்ல நல்ல கல்வி அளிப்பதன் மூலமாக அந்தக் குழந்தைகளை ஒரு பெரிய உத்தியோகத்திற்கு அனுப்பக் கூடிய ஒரு நிலையை நாம் உருவாக்கிக் கொண்டுள்ளோம்.

புதுடில்லியில் நடைபெற்ற மத்திய நல்வாழ்வுக் குழு, மத்திய குடும்பநலத் திட்டக்குழு ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் டாக்டர் எச். வி. அண்டே அவர்கள், மத்திய நல்வாழ்வு— குடும்பநலத் துறை அமைச்சர் திரு. பி. சங்கரானந்த் அவர்களுடன் உரையாடுகிறார்.




முதலாளிகளாக இருந்தாலும் சரி அல்லது நம்முடைய சமுதாயத்தினுடைய மேல்மட்டத்தில் இருக்கின்றவர்களானாலும் சரி அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி, பொது மக்களாக இருந்தாலும் சரி, அல்லது அரசியல் வாதிகளாக இருந்தாலும் சரி, விஞ்ஞானிகளாக இருந்தாலும் சரி, மருத்துவர்களாக இருந்தாலும் சரி இவர்கள் எல்லாம் விவரம் அறிந்தவர்கள். நானும் இதற்கு விதி விலக்கல்ல. ஏனென்றால் அத்தகைய நிலையிலே வாழ்கின்ற மக்கள் மிகவும் எச்சரிக்கையாக—ஜாக்கிரதையாக இருக்கின்றார்கள். ஏழைகள், தொழிலாளர்கள், மற்றவர்கள் சமுதாயத்தினுடைய அடிமட்டத்திலே வாழ்கின்ற மக்கள், ஏமாந்து கொண்டிருக்கின்றார்கள். இதனால் ஏழை இன்னும் ஏழ்மையைச் சந்திக்கின்ற நிலைதான் ஏற்படும்.

ஏனென்றால், 5 அல்லது 10 குழந்தைகளைப் பெறுவார்களேயானால் அதுதான் செல்வம் என்று தொழிலாளர்கள் கருதுகின்றார்கள்.

முதலாளிகளிடத்திலே செல்வம் இருக்கிறது—பணம் இருக்கிறது. தொழிலாளர்கள் தங்களிடத்திலே 10 குழந்தைகளாவது இருக்கட்டுமே என்று கருதுகின்றார்கள். இந்த வகையில் தான் முதலாளிகளோடு போட்டி போடுகின்றார்கள். இந்த நிலைமை இல்லாமல் இரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு, அவர்களுக்கு சரியான கல்வி அளித்து, அதன் மூலம் பெறுகின்ற லாபத்தைவிட பத்துக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதால் நட்டம் தான் ஏற்படுமே தவிர, லாபம் கிட்டாது என்பதைப் புரிந்துச் செயல்பட வேண்டும். இந்தக் குழந்தைகளின் நலன் கெட்டுப் போய்விடும். அத்தனைக் குழந்தைகளைப் பெற்ற தாய்மார்களின் உடல் நலம் கெட்டு விடும். இதனாலே தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு ஏற்படுகின்ற சேதங்கள் என்ன—தீமைகள் என்ன என்பது போன்ற கருத்துக்களை மையமாக வைத்துக் கொண்டு இந்தப் பிரச்சாரதை தொழிலாளர்கள் மத்தியிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் நடந்த தமிழ் எழுத்தாளர்கள் குடும்பநல இலக்கியக் கருத்தரங்கில், சென்னை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு. வைகுந்தம் உரையாற்றுகிறார்.





புது டில்லியில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட குடும்ப நலக் கூட்டத்தில் அமைச்சர் டாக்டர் எச். வி. அண்டே அவர்கள்.

இன்னும் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி என்னுடைய பேச்சை நான் முடித்துக் கொள்கிறேன்.

## தமிழகத்திற்கு முதலிடம்

அகில இந்தியாவை எடுத்துக் கொள்வோமேயானால் பத்தாண்டு மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 24.8 என்று இருப்பதாக நான் சொன்னேன். அதை உங்களுக்குத் தெளிவாக விளக்க விரும்புகிறேன்.

ஒரு நாட்டினுடைய மக்கள் தொகை 100 என்று வைத்துக் கொள்வோம். இதை ஓராண்டுக்கு என வைத்து அகில இந்தியாவினுடைய அடிப்படையிலே பார்போமோனால் 102.5 என்றாகிறது. நம்முடைய புள்ளி விவரத்தின் அடிப்படையிலே இது 101.7 என்றுதான் வளர்ச்சி இருக்கிறது. பத்து வருடத்திற்கு என்று பார்க்கும்போது அகில இந்திய அடிப்படையிலே 24.8 என்று வருகிறது. இங்கே தமிழகத்தைப் பொறுத்த அளவில் 17.2 என்று வருகிறது. இந்த வகையில் நம்முடைய தமிழகம் முதலிடத்திலே இருக்கிறது. ஆனால் இது அல்ல ஒரு அளவுகோல். இது குறித்து ஒரு பலத்த சர்ச்சை இருக்கிறது. குடும்ப நலத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி இருக்கின்றோம் என்பதற்கு அது அளவுகோல் என்று நாம் சொல்லுகின்றோம். மக்கள் தொகைப் பெருக்கம் நம்முடைய மாநிலத்திலே வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறோம். ஆனால் உண்மையான நிலையை நான் உங்களுக்குத் தெளிவாக்க விரும்புகிறேன். விஞ்ஞான அடிப்படையில் நீங்கள் இதைத் தெளிவாகப் புரிந்து கொள்வீர்களேயானால் உங்களது பணியிலேயே தொழிலாளர்களுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லலாம். இதிலே அதாவது இப்படி அதிகமாகும்போது பிறப்பு, இறப்பு என்று இரண்டு சங்கதிகள் இருக்கின்றன. பிறப்பு விகிதம் எவ்வளவு? அதிலிருந்து இறப்பு விகிதத்தைக் கழித்தால் மீதி இருப்பதுதான் மக்கள் தொகை வ்ளர்ச்சி.

பிறப்பு விகிதம் என்று பார்க்கும்போது அகில இந்தியாவை விட தமிழ்நாட்டு நிலை குறைவாகத்தான் இருக்கிறது. ஆனால் கேரள மாநிலத்தையும், தமிழ்நாட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கேரளாவில் இறப்பு விகிதம் குறைவாக இருக்கிறது நம்மைவிட. ஆகவே தான் நம்முடைய பிறப்பு விகிதத்தைவிட அவர்களது பிறப்பு விகிதம் கொஞ்சம் குறைவு.

பிறப்பு விகிதத்தைப் பொறுத்த அளவிலே நாம் இரண்டாவது இடத்திலே இருக்கின்றோம். ஆனால் மக்கள் தொகை வளர்ச்சி என்பதை எடுத்துக் கொண்டு பார்ப்போமேயானால் நாம் முதலிடத்திலே இருக்கின்றோம். நாம் நம்முடைய இலக்கை எட்ட வேண்டும் என்றால் மக்கள் தொகை வளர்ச்சி என்பதை மட்டும் ஒரு இலக்காக வைத்துக் கொள்ளாமல் பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டியதையும் ஒரு குறிக்கோளாக வைத்து இயங்க வேண்டும். நம்முடைய பிறப்பு விகிதம் எப்படி இருக்கிறதென்றால் 1000—க்கு 28. அகில இந்திய சராசரி நிலை 1000—க்கு 33 என்றிருக்கிறது. கேரளாவினுடைய சராசரி பிறப்பு விகிதம் 1000க்கு 26 (1979). அவர்களுடைய இறப்பு விகிதம் 1000க்கு ஏழு (1979). நம்முடைய தமிழகத்தினுடைய இறப்பு விகிதம் கேரளாவைவிட 1 சதவிகிதம் அதிகம். ஆகவே நாம் இறப்பு விகிதத்தையும் குறைக்க வேண்டியிருக்கிறது. பிறப்பு விகிதத்தையும் குறைக்க வேண்டியிருக்கிறது.

கடைசியாக நாம் எங்கே கொண்டு போய் நிறுத்துவதென்றால்—நம்முடைய இறப்பு இலக்கு என்னவென்றால் இறப்பு விகிதம் 1000க்கு 10 என்ற நிலையை உருவாக்க வேண்டும். அந்த நிலை உருவாகி விட்டால் வளர்ந்து விட்ட நாடுகளோடு நம்முடைய நிலையை ஒப்பிட ஏதுவாகும். நம்முடைய பிறப்பு விகிதத்தைக் கூட 1000க்கு 11 அல்லது 12 என்று கொண்டு வந்து விடுவோமேயானால் நன்றாக இருக்கும். அதை எப்போது அடையப் போகிறோம் என்று நமக்குத் தெரியாது. அதற்கு நீண்ட காலம் பிடிக்கும். பூஜ்யம் அளவு மக்கள் தொகை வளர்ச்சியை உருவாக்குவது (Zero population growth) என்பது இப்போது இருக்கக்கூடிய கண்ணோட்டத்துடன் நாம் மிக வேகமாக முன்னேறினாலும் கூட கி. பி. 2000—க்கு பிற்பாடுதான் அந்தமாதிரி நிலையை அடைய முடியும் என்ற ஒரு நிலைமை இருக்கிறது.

ஆகவே இந்தக் கருத்துக்களை எல்லாம் நீங்கள் நல்ல முறையில் ஆலோசித்து—இந்தக் கருத்தரங்கிலே கலந்து கொண்டிருக்கின்ற நிபுணர்களையெல்லாம் பயன்படுத்தி அவர்களுடன் கருத்துக்களை பரிமாறி, இதிலே மிகுந்த ஆர்வம் காட்டி பல தொழிலாளர் குழுக்களைக் கூட்டி அவர்களை நீங்கள் மூடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு உற்சாகம் பிறக்கும். உங்களுடைய கருத்துக்கள் என்னவென்று அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் இவையெல்லாம் உங்களுடைய கருத்துக்கள் என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அந்த நிலையை உருவாக்க வேண்டும். அந்த வகையிலே இந்தக் கருத்தரங்கம், அதாவது கருத்துக்களை—புள்ளி விவரங்களைச் சொல்லக் கூடியக் கூடமாக இதை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் கருத்தரங்கத்தை நல்ல வகையிலே பயன்படுத்திக்கொண்டு, குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்த மட்டில்மற்ற மாநிலங்களைவிட குடும்பநலத் திட்டத்தைப் பொறுத்து மிக நன்றாக இருக்கின்றோம் என்று சொல்வது மட்டுமல்லாமல், மற்ற மாநிலத்திலே இருக்கின்ற பலரும், 'அங்கே தமிழகத்திற்கு செல்லுங்கள்—சென்று கற்றுக் கொண்டு வாருங்கள்' என்று சொல்லக் கூடிய அளவுக்கு நாம் நல்ல முறையிலே முன்னோடியாக இருக்க வேண்டும். அந்த நிலையை உருவாக்கத் தொழிலாளர் தோழர்கள் உதவ வேண்டும். அந்த வகையிலே இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு பாராட்டுக்குரியது என்று கூறி, அரசின் சார்பாக — மாண்புமிகு புரட்சித் தலைவர் முதல்வர் அவர்களின் சார்பாக— அகில இந்தியாவினுடைய நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சங்கரானந்த் அவர்களின் சார்பாக—பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் சார்பாக இந்தக் கருத்தரங்கை நடத்துகின்றவர்களுக்கு நம்முடைய பாராட்டு தலைத் தெரிவித்துக் கொண்டு, மகிழ்ச்சியோடும், பெருமையோடும் நான் இந்தக் கருத்தரங்கைத் துவக்கி வைக்கிறேன்.

---

தமிழ் எழுத்தாளர் குடும்பநல இலக்கியக் கருத்தரங்கில் நாவலாசிரியை டாக்டர் லட்சுமி (வலது) நீரோட்டம் ஆசிரியர் திரு. அடியார் உரையாற்றுகிறார்கள்.






# எல்லா மதங்களுக்கும் பொதுவான திட்டம், குடும்பநலத்திட்டம்!

தமிழ்நாடு சட்டப் பேரவைத்தலைவர்
திரு. க. இராசாராம்

*(சென்னை இராசாசி மண்டபத்தில் நடந்த 30—8—1981 ஆம் நாள் நடந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களின் முதலாவது மக்கள் தொகை வளர்ச்சிப் பணி பற்றிய மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் ஆற்றிய வரவேற்புரை)*

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் குடும்பநல இயக்கம் நமக்கு புதிதல்ல. 1920-ம் ஆண்டிலேயே சுயமரியாதை இயக்கத்தின் தந்தையாகிய, தமிழகத்தில் நீண்ட நெடுங்காலமாகத் தொண்டாற்றிய தந்தை பெரியார் அவர்கள் குடும்பநலத்திட்டம் பற்றி ஒரு நூல் எழுதியிருக்கிறார்கள். அந்த நூலில் குடும்பநலம் பற்றி வெள்ளைக்காரன் நம் தேசத்தை ஆண்ட காலத்திலேயே அவர்கள் எடுத்துச் சொல்லி, குடும்பநலம் தேவை என்றும், குழந்தைகள் பெறுவதைக் குறைக்க வேண்டும் என்றும் எந்த வகையிலாவது கருத்தடை செய்து கொள்ள வேண்டும் என்றும் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்கள்.

அப்படிச் செய்து கொண்டிருந்த காலத்தில், மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருந்த டாக்டர் சந்திரசேகர் அவர்கள் இங்கே வருகைதந்த போது, வானொலி மூலம் தந்தை பெரியார் அவர்களை ஒரு பேட்டி கண்டார்கள்.

ஆண் குழந்தைகள் இல்லாமல், வெறும் பெண் குழந்தைகளாக பெற்றெடுத்துக் கொண்டவர்கள், ஆண் குழந்தை வேண்டுமென்று எதிர்பார்த்து முயற்சி செய்வதால், அதன் காரணமாக அதிகமான குழந்தைகளை பெற்றுவிடுகிறார்கள்; அதற்குத் தாங்கள் என்ன யோசனை சொல்கிறீர்கள் என்று கேட்டார்கள்.

அதற்குத் தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள், ''ஆண்களுக்கு உத்தியோகம் கொடுப்பதால் ஆண் பிள்ளை சம்பாதித்துப் போடுவான் என்று ஆண் குழந்தைகள் வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே நம் சட்டத்தில் உத்தியோகங்கள் கொடுப்பதில் ஆண்களுக்கு 50% என்றும், பெண்களுக்கு 50% என்று ஆக்கி விட்டால், ஆண் குழந்தையாக இருந்தால் என்ன, பெண் குழந்தையாக இருந்தால் என்ன? ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி பெண் குழந்தையாக இருந்தாலும் சரி மக்கள் மனமகிழ்ச்சி அடைந்து விடுவார்கள். ஆகவே அந்தக் காரியத்தைச் செய்யுங்கள்,'' என்று டாக்டர் சந்திரசேகர் அவர்களிடம் சொன்னார்கள்.

அப்படிப் பெரியார் அவர்கள் சொன்ன அந்த அறிவுரை எனக்கு இன்றைக்கு நினைவிற்கு வருகிறது. ஆகவே அந்த முறையில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திற்குத் தந்தை பெரியார் அவர்கள் 1920-ஆம் ஆண்டிலேயே விதை விதைத்தார்கள் என்பதை நான் இன்றைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

## நேரு அன்றே சொன்னார்!

அதைப் போல் பண்டித நேரு அவர்கள், இந்த மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள். வெள்ளைக்காரன் ஆண்ட காலத்திலேயே, இனிமேல் குழந்தைகள் அதிகமாகப் பிறந்து கொண்டே இருக்குமானால் நம்முடைய நாடு மிகப் பிற்போக்கு அடைந்த நாடாக ஆகிவிடும் என்ற எண்ணத்தை 1937-ஆம் ஆண்டிலேயே பண்டித நேரு அவர்கள் நாட்டுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

''இந்தியா ஏழை நாடாக இருக்கிறதென்றால் அதற்கு அதனுடைய சமூக ஆச்சாரங்களும், அதனுடைய பனியாக்களும், லேவாதேவிக்காரர்களும், எல்லாவற்றிற்கும் மேலாக அதனுடைய மாபெரும் மக்கள் தொகையுமேயாகும். மிகப் பெரிய பனியா இந்தியாவிலிருக்கும் பிரிட்டிஷ் அரசாங்கம்தான். இது தந்திரமாக அலட்சியம் செய்யப்படுகிறது. இந்த ஜனத் தொகையைப் பற்றி அவர்கள் என்னதான் செய்ய உத்தேசித்திருக்கிறார்களோ எனக்குத் தெரியாது. பஞ்சங்கள், கொள்ளை நோய்கள், மிகக் கூடுதலான மரண விகிதாச்சாரம் ஆகியவைகள் பேருதவி செய்த போதிலும் கூட மக்கள் தொகை இன்னும் மிதமிஞ்சிப்போய்க் கொண்டேயிருக்கிறது. கர்ப்பத்தடை பற்றிப் பேசப்படுகிறது.



என்னைப் பொறுத்த வரையில் கர்ப்பத்தடை பற்றிய அறிவு பரவுவதையும், அதன் முறைகள் கையாளப்படுவதையும் நான் ஆதரிக்கிறேன். ஆனால் இந்த முறைகளைக் கையாள்வதற்கே பொதுமக்களுக்கு மிக உயர்ந்த வாழ்க்கைத்தரம், சிறிதளவு பொதுக் கல்வி, நாடுமுழுவதும் எண்ணற்ற மருத்துவ நிலையங்கள் எல்லாம் தேவைப்படும். தற்கால நிலைமைகளில் கர்ப்பத்தடை முறைகள் பொதுமக்களின் கைக்கு முற்றிலும் எட்டாதவைகளாகவே இருக்கின்றன. மத்தியதர மக்கள் இதனால் பயனடையலாம் என்று நம்புகிறேன்,'' என்று பண்டித நேரு அவர்கள் 1937 ஆம் ஆண்டிலேயே இந்தக் கருத்தை நாட்டிலே வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

சமீப காலத்திலேகூட ஜெர்மன் நாட்டிலிருந்து இந்த நாட்டுக்கு வந்த லாங்ஸ்டன் என்ற பெரிய பொருளாதார நிபுணர் வளர்ந்துவருகிற நாடுகளில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தாமல் போவார்களேயானால், அந்த நாட்டின் எதிர்காலம் இருண்ட எதிர்காலமாகப் போய்விடும் என்ற எச்சரிக்கையைத் தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். மக்கள் தொகை பெருகிக் கொண்டிருக்கும் நாட்டினரான நாம் விழித்துக்கொள்ள வேண்டிய நேரம் இது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசியாக் கண்டத்திலேயே உலகத்தில் இரண்டாவதாக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா பெருமைப் படுத்திப் பேசப்படுகிறது. ஆசியாக் கண்டத்தில் இருக்கும் மற்ற அத்தனை நாடுகளும் நம்மைவிட வளமாக, நலமாக, நல்வாழ்வு நடத்திக் கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் அவர்கள் மக்கள் தொகையை அளவோடு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடுகளைப் பார்த்தால், நம்முடைய நாட்டிலிருந்து அங்கு ஆட்களை ஏற்றுமதி செய்கிறார்கள், வேலைக்கு வரச் சொல்லுகிறார்கள். வேலைக்கு வருவதற்கு ஐயாயிரம் ரூபாய் சாதாரணமாக மாதச் சம்பளம் தருகிறார்கள். அப்படித் தரும் அளவுக்கு மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார்கள். பெரிய நிலப்பரப்பு இருக்கிற காரணத்தாலும் மக்கள் தொகை குறைவாக இருக்கிற காரணத்தாலும் ஒவ்வொருவரும் வளமாக வாழ்வதை நான் சமீபத்தில் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன்.

## அண்ணாவின் அறிவுரை

ஆகவே அந்த வகையில் நம்முடைய நாட்டில் எல்லா வளமும் இருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார்கள், 'India is a rich country but Indians are poor' என்று சொன்னார்கள். இந்தியா பணக்கார நாடு, ஆனால் இந்தியர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள் என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம், நம்முடைய மக்கள் தொகையை நாம் கட்டுப் படுத்தாதது தான். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த 10 ஆயிரம்கோடி செலவு செய்வது மட்டுமல்லாமல் அதை நல்லபடியாக பயன்படுத்த வேண்டுமென்றும் இந்தியப் பேரரசு கருதுகிறது. அந்தக் கருத்தின் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் மக்களை அடிக்கடி சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் பல நாடுகளைச் சுற்றியவர்கள் நல்ல அறிவுத் திறனைப் பெற்றவர்கள், உலக ஞானத்தைப் பெற்றிருக்கிறவர்கள், சிந்தனையாளர்கள். ஆகவே இந்த மாநாட்டிலே பெறுகின்ற கருத்துக்களை மட்டுமல்லாமல் உங்களுக்குள்ளே கலந்து பேசுகின்ற குழுக்களிலே பெறுகின்ற எண்ணங்களை எடுத்துச் சென்று நாடு பூராவும் மக்களுக்குக் கூறி குடும்பநலத் திட்டம் பற்றிப் பேசவேண்டுமென்பதற்காகத்தான் இந்த மாநாட்டைக் கூட்டியிருக்கிறோம்.

குடும்பநலத் திட்டத்தில் கேரளம், மகாராட்டிரம், ஒரிஸ்ஸா, பஞ்சாப், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் முன்னணியில் இருக்கின்றன. மற்ற மாநிலங்கள் அத்தனையும் பின்தங்கி இருக்கின்றன. இதிலே எனக்கு ஒரு பிரச்சினை இருக்கிறது. இஸ்லாம் மதத்தினருக்கு குடும்பக் கட்டுப்பாடு பற்றி யாரும் எதுவும் எடுத்துச் சொல்வது இல்லை என்ற ஒரு குறைபாடும் இருக்கிறது. அதைப் பற்றிக்கூட டாக்டர் சந்திரசேகர் அவர்கள் காலத்திலேயே பெரிய ஆராய்ச்சிகளெல்லாம் நடைபெற்றிருக்கின்றன. அதைக் குறிப்பிட்டுச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

முஸ்லீம் மதத்தினரைப் பொறுத்த வரையில் மிகக் கவனமான—விளக்கமான ஆராய்ச்சிக்குப் பிறகு குடும்ப நலத்திட்டத்தைக் கையாளலாம் என்பது குறித்துச் சொல்லப்பட்டிருப்பதாவது :

**குறிப்பாக ஹனவி மதஹபின்படி, மகா முப்தி அவர்கள் ஹிஜ்ரி 1355, துல்கஃதா பிறை, 12 ஆம் நாளில் (25—1—1937) தனது பத்வாவை (தீர்ப்பை) வெளியிட்டார். அது வருமாறு : ''கருத்தரிப்பதைத் தடுக்க... எந்தவிதமான நடவடிக்கைகளை எடுக்கவும் கணவனுக்காவது மனைவிக்காவது, பரஸ்பர சம்மதத்தோடு, அனுமதிக்கப்பட்டிருக்கிறது''. (இயற்கை, செயற்கை இரண்டு முறைகளையும் அவர் குறிப்பிடுகிறார்.)**

ஆகவே இஸ்லாம் மதத்திலேயும் கருத்தடையைக் கையாளலாம் என்பதையும் அதற்கு எந்தவிதமான தடையும் இல்லை என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இத்தகைய கருத்துக்கள் எல்லா மதங்களுக்கும் பொதுவான கருத்துக்கள் என்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது.

சமீபத்திலே இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலே பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தன்னுடைய கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு உலக சுகாதார மாநாட்டிலேயும் அம்மையார் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் சொன்னதாவது : ''புதிய எளிய சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டுமென்ற முயற்சிகளில் ஈடுபடுவதிலும் ஆண்களும் பெண்களும் பயன்படுத்தும் வகையில் அந்த வடிவ அமைப்புகள் அமைக்கப்பட வேண்டுமென்பதிலும் அதன் மூலமாக குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்பதிலும் அரசாங்கம் அக்கறை உடையதாக இருக்கிறது. சிக்கனமுள்ளதாகவும், மீண்டும் பயன்படுத்தத் தக்க முறையிலும் நல்ல பயன்தரத் தக்கதாகவும் அவை இருக்க வேண்டும். குடும்பக் கட்டுப்பாடு என்பது பெண்களுக்கு மட்டுமல்ல, இந்தச் சுமை அவர்களை மட்டுமே சேரக்கூடாது என்று அந்த உலக சுகாதார மாநாட்டிலே அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.




# ரட்சகர் ராபர்ட் காக்

கூற்றங் காண இயலாத, செம்மையான, முற்றுப் பெற்ற முடிவுகளைக் கண்டறிந்த பேரறிவாளர்; பூச்சிகள், செடி கொடிகள், தாதுப் பொருள்கள் ஆகியவற்றை இளமையிலேயே சேகரித்து—ஆய்வு செய்த ஆர்வலர்; இத்தகைய திறனாய்வுக்காகப் பாராட்டெடுக்கப்பெற்று காட்டின்ஜன் பல்கலைக் கழகத்தில் இயற்கை அறிவியல் நூல்களைப் படித்துத் தேற—உதவித் தொகைப் பெற்று உயர்ந்தவர்; தனது 23—ஆவது வயதிலேயே மருத்துவத்துறையில் எம். டி. பட்டம் பெற்று—இராணுவ டாக்டராகவும், சிற்றூர் ஒன்றில் சிறந்த மருத்துவராகவும் பணி செய்து—பார் மெச்ச புகழ் பரப்பியவர்— நோய்களனைத்தும் கண்ணுக்குப்புலப்படாத மெல்லிய அணுக் கிருமிகள் மூலமே உண்டாகின்றன என்ற கோட்பாட்டில் நீங்கா நம்பிக்கை கொண்டவர் !

யார் இவர்?

ஜெர்மானிய நாட்டில் எளிய நடுத்தரக் குடும்பமொன்றில் 1843—ஆம் ஆண்டு, டிசம்பர் 11-ல் பிறந்து, சிறந்த ராபர்ட் காக் என்ற விஞ்ஞான வித்தகரே இவர்!

ஆந்த்ராக்ஸ் (கால் நடைகளுக்கு வரும் நோய்—Anthrax) என்ற நோயால் மாண்ட விலங்குகளின் இரத்தத்தில் குச்சி போன்ற கிருமிகள் தென்படுகின்றன என்பதை ராபர்ட் காக் தான் விலங்கு—தாவர விஞ்ஞான இயலில் வெற்றிகரமாகக் கண்டுபிடித்தார். இத்தகைய ஆந்த்ராக்ஸ் நோயின் அணுக் கிருமிகள் இதர விலங்குகளுக்கும் தொற்றி—பரவி—அழிவையூட்டுகின்றன என்ற அவரது இரண்டாவது ஆய்வு, வெற்றி மேல் வெற்றியைக் குவித்தது.



உயிர் அணு ஆராய்ச்சித் துறையில் வெற்றி கண்டு, உணர்வு பொங்கிய ராபர்ட் காக் பல் திற ஆய்வுகளில் ஈடுபட்டு, விஞ்ஞான விற்பன்னர்களின் வாழ்த்துதலைப் பெற்று, ஈடு எடுப்பற்ற இணையில்லா கண்டுபிடிப்பொன்றினை உலகுக்கு உணர்த்தினார். இருமல் நோய்-காசநோய்- க்ஷயரோகம்- என்புருக்கி நோய்— ஈளை இருமல் — டி. பி. என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப் பெறும் வியாதி: அலுப்பு, களைப்பு, சோர்வினையூட்டி அன்னத்தை வெறுத்தொதுக்கி, தூக்கத்தைத் துறக்கவைத்து, எடையைக் குறைத்து, நெஞ்சு வலி—காய்ச்சலை உண்டாக்கி, கோழையும் குருதியுமாக துப்ப வைத்து, பல லட்ச மக்களை எலும்புந்தோலுமாயாக்கி, அவர்களுள் பலரை சவக்குழிக்கு அழைத்துச் செல்லும் க்ஷயரோகம்—வருவது எதனால்? பரவுவது எப்படி? என்ற உண்மைகளை உணர முடியாமல், தக்க மருத்துவமும், செய்ய வகைதெரியாமல் சஞ்சலத்தில் மூழ்கியிருந்த விஞ்ஞானிகளுக்கு வழி காட்டினார் ராபர்ட் காக். காச நோய்க்குக் காரண பூதங்களாயிருந்த டியூபர்கிள் பேசிலி (Tubercle Bacille) என்ற கிருமிகளைக் கண்டறிந்தார். அந்நோய்க் கிருமிகள் தொற்றால் நேரிடும் கொடுமைகளையும் விளக்கினார்—1882 மார்ச் 24 அன்று நடந்த அற்புதம் இது. காரணத்தைக் கண்டுபிடித்து விட்டால், அதற்கு நிவாரணம் காணும் காரியம் எளிது தானே!

இன்று உலகம் காச நோய்க் கட்டுப்பாடு முறைகளில் வெற்றி நடைபோட்டு வருகிறது. வீர வணக்கமாக 1982 மார்ச் 24 — ஆம் நாள் அன்று, நாசம் புரியும் காச நோய்க் கிருமிகள் கண்டுபிடிக்கப் பெற்ற நூற்றாண்டு விழா எடுக்க இருக்கிறோம். நன்றிக் கடப்பாடு உடைய நல்லதோர் உலகம் இதனினும் செய்யக் கூடியது யாது?

அளவுக்கு மீறிய பிள்ளைகளைப் பெற்று—அவலக் கவலைக்குள்ளாகி-காசநோயின் பிடியில் சிக்கி, செய்வதறியாது வையகந்துறந்த மேனாட்டு ஏழைத் தையற்காரர் ஒருவரின் 9 குழந்தைகளில், 7—வது அன்பு மகளாகத் தோன்றினார், மார்கரட் சாங்கர் எல்லையற்ற பிள்ளைப் பேற்றுக்கும் காச நோய்க்கும் தொடர்பு உள்ளது என்பதை உணர்ந்த சாங்கர், உலகமெலாம் சுற்றிவந்து, மனிதாபிமான பிரச்சாரம் செய்தார்! ராபர்ட் காக்கும் மார்கரட் சாங்கரும் மனித குலத்தை வாழ வைக்க வந்த ரட்சகர்களே! வாழ்க அவர்கள் புகழ்! ——

## நாடாளுமன்ற இடங்கள்

எனக்கு இந்த மாநாட்டை நடத்துவதிலே ஒரு பிரச்சினை இருக்கிறது. நான் நாடாளுமன்ற உறுப்பினராக 10 ஆண்டுக் காலம் இருந்திருக்கிறேன். அப்படி இருந்த நேரத்திலே குடும்பக் கட்டுப்பாடு பற்றிய பிரச்சினைகளில் பங்குகொண்டு வருகின்ற நேரத்திலே ஒரு கருத்தை எடுத்துச் சொல்லி இருக்கிறேன். இந்தியப் பேரரசு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்கிறது. அதைப் பற்றி எனக்குக்கவலை கிடையாது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. தமிழ்நாடு, மகாராட்டிரா போன்ற ஐந்து மாநிலங்கள் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதிலே முன்னணியில் நிற்கின்றன. மக்கள் தொகை குறைந்ததன் காரணமாக சென்ற முறை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடங்கள் நமக்கு 41 இருந்தன. அதிலே 2 இடங்கள் இப்போது குறைந்து விட்டன. 2 இடங்கள் குறைக்கப்பட்டு 39 இடங்கள் என்ற அளவிற்கு இருக்கின்றன. இப்படிக் குறைக்கப்பட்ட நிலையில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளிலே ஈடுபடுகிறபோது இது ஒரு குறைபாடாகவே எனக்குப் படுகிறது. நான் வேண்டுவது எல்லாம் இந்த மாநாட்டில் கலந்துகொள்கிறவர்கள் இதிலே சிந்தனையைச் செலுத்தியாக வேண்டும். மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை மக்கள் பிரதிநிதிகள் குறையாத தன்மையில் அமல்படுத்த வேண்டுமென்று இந்தியப் பேரரசுக்கு வலியுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

——

# சவால்கள்

**— எஸ். மெய்யப்பன்**

முத்துண்டு! தங்கமுண்டு! முகில் மூடும் மலைகளுண்டு! பனி மூடும் இமயமுண்டு! நனிச்சாறுக் கனிகளுண்டு! அகில் தேக்கு மரங் கொழிக்கும் ஆரண்யச் செல்வ முண்டு! நடக்கின்ற வழியெல்லாம் வளஞ் சேர்க்கும் நதிகளுண்டு! செயல் மிக்க உழவர் மக்கள் பொன் பெருக்கும் வயல்களுண்டு! ஆலைக்குக் கரும்புண்டு! தொழிற் சாலைக்கு இரும்புண்டு! வாட்டியுடல் வதைக்காத தட்பவெட்ப நிலையுமுண்டு!

இத்தனை செல்வங்களும் நமக்கு இயற்கையன்னை வழங்கியிருக்கும் பரிசுகள். இவைகளையெல்லாம் நமது பாரதம் பக்குவமாகப் பயன் படுத்திக் கொண்டுதான் வருகிறது.

வயல்களில் நல்ல உற்பத்திப் பெருக்கம்! வாணிபத்தில் சிறந்த முன்னேற்றம்! ஆலைகளிலெல்லாம் அதிகமான உற்பத்தி! எல்லாத் துறைகளிலும் எதிர்பார்த்த வெற்றிகள்!

ஆனாலும், இந்த வளர்ச்சிகள் அத்தனையும் மக்களின் அன்றாட வாழ்க்கையில் பிரதிபலிக்கிறதா என்றால், இல்லை என்றுதான் பதில் கிடைக்கிறது. இதற்குக் காரணம் தான் என்ன?

ஒரு சுவையான விடுகதை. ஒரு குளத்தில் அல்லிச்செடி வளர்ந்து படர்கிறது. ஒவ்வொரு நாளும் முந்திய நாள்பரப்பில் இரண்டு மடங்காகப் படர்கிறது. இவ்விதம் ஒவ்வொரு நாளும் முந்திய நாள் பரப்பில் இரண்டு மடங்காகப் படர்ந்தால், முப்பது நாட்களில் அல்லிச் செடி, குளம் முழுவதும் படர்ந்து விடும். அப்படியானால், குளத்தின் பாதிப்பாகம் படர்வதற்கு எத்தனை நாளாகும்?

முழுக்குளம் படர முப்பது நாளென்றால் அரைக்குளம் படர பதினைந்து நாளாகும் என்று பலரும் படீரென்று பதிலுரைக்கக் கூடும்! அதுதான் இல்லை! அரைக்குளம் படர 29 நாட்களாகும். ஒவ்வொரு நாளும் முந்திய நாள் பரப்பில் இரண்டு மடங்காகப் படரும் தன்மை அல்லிச் செடிக்கு உள்ளதால், முப்பதாம் நாள் ஒரே நாளில், அது இரண்டு மடங்காகி முழுக்குளத்திலும் படர்ந்துவிடும்.

இது விளையாட்டுக்காகப் போடப் பட்ட விடுகதையல்ல. தங்குதடையின்றி மக்கள் பெருகிக் கொண்டே சென்றால், எதிர்வரும் காலத்தில் நாம் எத்தகைய பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை வெஸ்டர் பிரவுன் என்ற ஃபிரெஞ்ச்சு ஆசிரியர், 'இருபத்தி ஒன்பதாம் நாள்' என்ற நூலில் இந்த விடுகதையின் மூலம் விளக்குகிறார்.

1950-ல் இந்தியாவின் மக்கள் தொகை 34 கோடி! 1980-ல் 68 கோடியாகப் பெருகியுள்ளது. 34 கோடி! 68 கோடி! அதாவது 30 ஆண்டுகளில் இரண்டு மடங்காக ஆகியுள்ளது.

மக்கள் தொகை பெருகினால் நாட்டின் செல்வமும் பெருக வேண்டுமே என்ற எண்ணம் எழக்கூடும். ''மனிதன் பிறக்கும்போது வயிறுடன் மட்டும் பிறக்கவில்லை; இரண்டு கைகளுடன் பிறக்கிறான்'' என்பதால் ''மக்கள் பெருக்கம் ஒரு நாட்டில் செல்வப் பெருக்கம்'' என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. கண்டார்ஸெட் என்ற ஃபிரெஞ்ச்சு தத்துவ ஞானியும், வில்லியம் காட்வின் என்ற ஆங்கிலப் பொருளாதார வல்லுநரும், விரைவில் ஒரு புது இன்ப உலகம் தோன்றப் போகிறது என்று கனவு கண்டார்கள்.

விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பங்கள் அபரிமிதமாக வளர்ச்சியடைந்து, சமுதாயத்தின் ஒரு மணி நேர உழைப்பு, அந்த சமுதாய மக்களுக்கு வேண்டிய அத்தனை தேவைகளையும் நிறைவு செய்துவிடும். அந்த உலகத்தில் இன்பமேயல்லாமல் துன்பமில்லை! பார்த்த இடமெல்லாம் வேண்டிய பொருட் குவியலிருக்கும்; பற்றாக் குறையில்லை. ஏழையில்லை பணக்காரனில்லை! எல்லோரும் இன்பமாக வாழும் சொர்க்க புரியாக உலகம் மாறிவிடும்.

இத்தகைய ஒரு சொர்க்க உலகம் விரைவில் உருவாகக் கூடும் என்று ஐரோப்பிய நாட்டுமக்கள் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு கனவு கண்டார்கள்.

ஆனால் அந்தக் கனவு நிறைவேறாது என்று அப்போதே பொருளாதார நிபுணர் மால்தஸ் மறுத்துக் கூறினார். ஏனெனில் உணவு உற்பத்தி செய்யும் மனிதனின் சக்தி 1, 2, 3, 4, 5 என்று கூட்டல் விகிதத்தில் பெருகுகிறது. ஆனால் வாரிசைப் பெருக்கும் அவனது சக்தி 2, 4, 8, 16, 32 என்று பெருக்கல் விகிதத்தில் பெருகுகிறது என்று விளக்கம் கொடுத்து, 25 ஆண்டுகளில் ஒரு நாட்டின் மக்கள் தொகை இரண்டு மடங்காகப் பெருகிவிடும் என்றார்.

அப்போது மால்தஸ் போட்ட கணக்கு இப்போது நம் இந்தியாவைப் பொறுத்த வரையில் உண்மையாகி விட்டது; 25 ஆண்டுகளில் 68 கோடியாக ஆகியிருக்க வேண்டிய மக்கள் தொகை குடும்பநலத் திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருவதால் 30 ஆண்டுகளில் அந்த இரட்டிப்பு நிகழ்ந்திருக்கிறது.

முன் சொன்ன விடுகதையுடன் இதனை இணைத்துப் பாருங்கள். அல்லிக்கொடி 29 நாட்களில் பாதிக் குளம் பரவியது போல், கல் தோன்றி மண் தோன்றிய காலத்திலிருந்து இந்தியாவில் மக்கள் பெருகி 1950-ஆம் ஆண்டில் 34 கோடிதான். ஆனால், ஒரே நாளில் அல்லிச் செடி இரண்டு மடங்காகப் பெருகி, குளத்தின் மறு பகுதியை நிரப்பியதுபோல், சென்ற 30 ஆண்டுகளில் மக்கள் தொகை இரட்டிப்பாகி 68 கோடியாக உள்ளது.

இன்னும் ஒரு முப்பது ஆண்டுகளில் இது இரட்டிப்பாகி 136 கோடியாகலாம். மேலும் ஒரு முப்பது ஆண்டுகளில் அது இரட்டிப்பாகி 272 கோடியாகலாம். அதாவது இந்திய மண்ணில் இன்று பிறக்கும் ஒரு குழந்தை தன் 60ம் வயதில் 272 கோடி மக்களுக்கிடையில் ஒரு பரிதாபத்திற்குரிய ஜீவனாக வாழ வேண்டிய நிலை ஏற்படும்.

இப்போதே உணவுப் பற்றாக் குறை; உடைப் பற்றாக் குறை; நுகரும் பொருட்கள் பற்றாக்குறை; வேலையில்லாத் திண்டாட்டம்; ஒவ்வொரு ஆண்டும் 40 லட்சம் புதிய வேலை வாய்ப்புகள் வேண்டும்; 25 லட்சம் புதிய வீடுகள் கட்டியாக வேண்டும்; இதற்கு புள்ளி விவரங்கள் தேவையே இல்லை; ஒவ்வொரு வீடும் புள்ளி விவரக் கிடங்கு தான். ஒவ்வொரு வீட்டிலும் பட்டதாரிகள் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் வேலையின்றித் தவிப்பது வெள்ளிடைமலை. ஒவ்வொரு இல்லத்தலைவியும், வீட்டுப் பொருள்களின் பற்றாக்குறையை அன்றாடம் முனகலின் மூலம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியானால் எதிர்காலம் எப்படி இருக்கக் கூடும்! உண்மையில் அதை கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாது!

ஆனால் ஒரு பொருளாதார வல்லுநர் கற்பனை செய்து பார்க்கிறார்: ''மக்கள் தொகை இப்படியே வளர்ந்து கொண்டு போனால் இன்னும் 600 ஆண்டுகளில், ஒவ்வொரு மனிதனுக்கும் நிற்க ஒரு சதுர அடி நிலம் மட்டுமே கிடைத்து, உலக நிலப்பரப்பு முழுதும் மனிதர்கள் நிற்க வேண்டிய நிலை ஏற்படும்'' என்பதுதான் அந்தக் கற்பனை.

இன்னொரு பொருளாதார நிபுணரின் சுவையான கற்பனையைக் கேளுங்கள்! ''இன்னும் 600 ஆண்டுகளில் மனிதன் உண்பதற்கு மீன் மட்டுமே உணவாகக் கிடைக்கும்''.

இதைக் கேட்டதும் அசைவ உணவுக்காரர்களுக்கு வாயெல்லாம் எச்சில் ஊறக்கூடும்; உட்பொருளை உணர்ந்தால், வாயெல்லாம் ஈரப் பசையும் இன்றி உலர்ந்து போகும். நிலப்பரப்பு முழுதும் மனிதர்கள் நிரம்பிப்போய், பயிர் செய்ய ஒரு அங்குல நிலம் கூட இல்லாமல் போய்விடும்; அதனால்மீன் போன்ற கடலில் வாழும் ஜந்துகளைப் பிடித்தே உண்ண வேண்டும் என்பதுதான் அதன் உட் பொருள்.

ஜனங்கள் நிலப்பரப்பில் நிற்கக் கூட இடமில்லாத நிலை ஏற்பட முடியுமா......அப்படியொன்றும் நடக்கவே முடியாது என்று சிலர் வாதிடக் கூடும்; அந்த வாதம் முற்றிலும் சரியானது தான். ஏனென்றால் இந்த நிலை ஏற்படுவதற்கு முன்பாகவே நாடுகளுக்கிடையே பெரும் போர் மூண்டு உலகம் தானாகவே அழிந்து போகும் சூழ்நிலை வந்து விடும்.

இதையும் கற்பனைக் கண் கொண்டு பார்த்து நாவலாசிரியர்கள் கதைவடிக்கிறார்கள்: நெவில் சூட் என்ற நாவலாசிரியர் 'கடற் கரையில்' என்ற தன் நாவலில் இதைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

மூன்றாம் உலகப் போர் முடிந்து விட்ட பிறகு கதை தொடங்குகிறது.

ஆஸ்திரேலியாக் கண்டத்திலிருக்கும் மக்களுக்கு ஒருவித ஆச்சரியம். உலகத்தில் வேறு எந்தப் பகுதியிலிருக்கும் மக்களுடனும் ரேடியோ மற்றும் வயர்லெஸ் தொடர்புகள் அவர்களுக்குக் கிடைக்க வில்லை; இதனால் உலக நிலையைக் கண்டு வர ஒரு நீர்மூழ்கிக் கப்பலை அரசு அனுப்பி வைக்கிறது. அந்த நீர் மூழ்கிக் கப்பல், சைனா, ஜப்பான், அமெரிக்கா, ஆப்பிரிக்கா, இந்தியா, என்று நாடு நாடாக, கண்டம் கண்டமாகச் சுற்றுகிறது. மனித உயிர்கள் மற்றும் பிராணிகளின் அறிகுறியே எந்த நாட்டிலும் இல்லை;

மூன்றாம் உலகப் போரில் வெடிக்கப் பெற்ற குண்டுகளிலிருந்து வெளிப்பட்ட ரேடியோ அணுக்கதிர் அலைகளால் அனைத்து நாட்டு மக்களும் அழிந்து போய் விட்டார்கள்.

அப்படியானால் ஆஸ்திரேலியாக் கண்டத்தில் மட்டும் மக்கள் இன்னும் எப்படி உயிருடன் இருக்கிறார்கள்;

ஆஸ்திரேலியாக் கண்டம் உலகக் கோளத்தின் தென் பகுதிக் கோடியில் ஒதுங்கியுள்ள நிலப்பரப்பு.

வெடித்த குண்டுகளிலிருந்து வெளிப்பட்ட ரேடியோ அணுக்கதிர் அலைகள் உலகக் கோளத்தின் வடக்கு மற்றும் மத்தியப் பகுதிகளை அழித்துவிட்டு, மெதுவாகத் தெற்கு நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது. இன்னும் மூன்று மாத காலத்தில் அந்த ரேடியோ அணுக்கதிர் அலை ஆஸ்திரேலியாக் கண்டத்தை வந்தடையும். அப்போது அத்தனை மக்களும் அழிந்தே தீர வேண்டும்.

இதை உணர்ந்ததும் ஆஸ்திரேலிய அரசாங்கமே சுலபமாக இறப்பதற்கு மாத்திரைகளை உற்பத்தி செய்து மக்களுக்கு விநியோகம் செய்கிறது; மக்களும் இருக்கும் வரை ஆனந்தமாக இருக்கலாம் என்று மனம் போனபடியெல்லாம் கேளிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

அந்த மூன்று மாத காலமும் முடிகிறது; நகர்ந்து வந்து தாக்கிய அணுக் கதிர் வீச்சால், ஆஸ்திரேலியாக் கண்ட மக்களும் அடியோடு அழிந்து போகின்றனர்.

'இப்போது உலகத்தில் ஒரு ஜீவனுமில்லை; மறுபடியும் இவ்வுலகில் மனித இனம் தோன்ற எத்தனைக் கோடி வருஷங்களாகுமோ தெரியாது' என்று நாவலாசிரியர் கதையை முடிக்கிறார்.

இந்த பயங்கரக் கற்பனையை, கற்பனை என்றே தள்ளிவிட முடியவில்லை; இது நிஜமாகும் வாய்ப்பு நம் கண் முன்னாலேயே நிழலாடிக் கொண்டுதான் இருக்கிறது.


இன்றைய வேகத்தில் மக்கள் தொகை பெருகிக் கொண்டே செல்லுமானால் மூன்றாம் உலகப் போர் வெகு தூரத்தில் இல்லை; தற்போது கண்ணுக் கெட்டிய தூரம்; சிறிது காலத்திலேயே இது கைக்கெட்டிய தூரமாகி விடலாம்.

'நாட்டைப் பற்றி விடுங்கள்; எங்கள் வீட்டுக்கு ஒன்றும் ஆகிவிடப் போவதில்லையே' என்று சிலர் நினைக்கக் கூடும். மக்கள் பெருக்கம் விடுக்கும் சவால் முதலிலே வீட்டுப் குத்தான்; பிறகுதான் நாட்டுக்கு!

வீட்டிலே குழந்தைகள் பெருகுமானால் குடும்பத்தின் பொருளாதாரம் உடனடியாகச் சீர் குலைந்து போகும்; அழகான இல்லத்தலைவியின் ஆரோக்கியம் அழிந்து படும்; போதிய பராமரிப்பிற்கு வழியின்றி வருங்கால வாரிசுகளாம்—குழந்தைச் செல்வங்கள் வாடி வதங்கிப் போகும்; வீட்டிற்குத் தூணாக விளங்கும் குடும்பத் தலைவன் நிலை குலைந்து போவான்; இவைகளை விடப் பெருங்கேடுகள் ஒரு குடும்பத்திற்கு வேண்டுமோ!

ஆகவே வருங்காலம் வளமானதாக இருக்க வேண்டுமென்றால், இன்றைய இளம் சிறார்களின் வாழ்க்கை இன்பமயமானதாக ஆக வேண்டுமென்றால், தாய்மார்கள் ஆரோக்கியமான, ஆனந்தமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டுமென்றால், ஒவ்வொரு குடும்பத்தின் வாழ்க்கைத் தரமும் கணிசமான அளவில் உயர்ந்திட வேண்டுமென்றால் மக்கள் பெருக்கம் விடுக்கும் சவாலை, ஒவ்வொரு குடும்பத் தலைவியும் குடும்பத் தலைவனும் ஏற்றுக் கொண்டு, குடும்பத்தை அளவுபடுத்திக் கொள்ள வேண்டும்; இதுவே நாட்டை அழகு படுத்துவதற்குரிய ஒரே வழியாகும்.

[''மக்கள் பெருக்கம் விடுக்கும் சவால்கள்'' என்ற தலைப்பில், சென்னை வானொலியில் 9—6—91 அன்று ஒலிபரப்பானது.]



வ. ஆ. மாவட்டம் முதூர் ஆரம்ப சுகார நிலையத்தைச் சேர்ந்த காவலூரில் நடந்த புத்தறிவுப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டவர்கள் (வலம்) முகாமில் அரக்கோணம் பஞ்சாயத்து யூனியன் ஆணையர் பேசுகிறார்.

## இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம்

எச். நாகூர் மீரான்

இராஜபாளையம் ஒன்றியம் முகவூர் கிராமத்தைச் சேர்ந்தவர் திரு. வி. எஸ். கல்யாணசுந்தரம். அவர் அதே ஊருக்கு ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தவர். அவர் குடும்பத்தில் பெற்றோர்கள் நல்ல ஐதீகம். அவர்கள் வீர சைவம் ஆனதால் குடும்ப நலத்தை ஏற்பதற்கு பலத்த எதிர்ப்பு இருந்தது. அவருக்கு 1958ல் திருமணம். 1959—ல் முதற் பையன், 1961ம் ஆண்டுக்குள் இரண்டு பையன்கள் வீட்டில் தவழ்ந்தனர். அத்துடன் அவர் நிறுத்த விரும்பினார்.

தாயாரின் எதிர்ப்புக் காரணமாக அது தள்ளிப் போடப்பட்டது. தாயாரை வழிக்குக் கொண்டு வருவதற்குள் ஆண்டுகள் ஓடி விட்டன. அதே சமயம் குழந்தைகளின் எண்ணிக்கையும் ஆறாக உயர்ந்து விட்டன. (அதில் ஒன்று பின்னால் இறந்துவிட இப்போது ஐந்தாக நிற்கிறது) 1969 ல் ஒரு வழியாக அவர் மனைவிக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. அதுவும் ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து ஒரு தனியார் மருத்துவ மனையில் செய்விக்கப்பட்டது. மூன்றோடாவது நின்றிருக்கலாம். ஐந்து அதிகம் தான்... அதனைத் தவிர்க்க முடியாமல் போய் விட்டதே என்று இப்போதும் வேதனையுடன் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

இவரது மனைவிக்கு குடும்பநல அறுவைச்சிகிச்சை நடந்ததன் விளைவாகவும், இவர் பக்குவமாக திட்டம் பற்றி எடுத்துச் சொன்னதன் விளைவாகவும், இவரது சகோதரர்களின் மனைவி மார்களும் இவரது நெருங்கிய உறவினர்களில் வீட்டுப் பெண்கள் சிலரும் ஓரிரு ஆண்டுக்குள்ளாகவே குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார்கள்.

அதன் பின்னர் அவர் தான் வசிக்கும் தெருவில் உள்ளவர்கள் இரண்டுக்கு மேல் குழந்தைகள் பெற நேர்ந்தால் அவர்களை அடிக்கடி அவர்கள் வீட்டுக்குச் சென்றும், தெருவில் போகும் போது சந்தித்தும் விபரங்களை எடுத்துக் கூறுவது உண்டு. சில சமயங்களில் உரிமையுடன் திட்டுவதும் உண்டு. அப்படியெல்லாம் செய்ததன் பலனாக அவர் வசிக்கும் தெருவில் மூன்றுகுழந்தைகளுக்கு மேல் உள்ள குடும்பங்கள் மிக மிகக் குறைவாகவே உள்ளனவாம். அவர் பின் வரும் கருத்துக்களை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறார்.

1) 50 வயது வரை திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கும் நபர்களுக்கு பரிசு வழங்குதல்.

2) திருமண மானவர்கள் 5 ஆண்டுகள் வரை குடும்ப நல வழி மூலம் குழந்தைப் பேற்றை தடுத்துக் கொண்டாலும், ஒரு குழந்தைக்கும் மறு குழந்தைக்கும் 5 ஆண்டுகள் இடைவெளி இருக்கும்படி பார்த்துக் கொண்டாலும், இரண்டுக்கு மேல் குழந்தைப் பேறு இல்லாமல் பார்த்துக் கொண்டாலும், அவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் பரிசு பத்திரங்கள், சான்றிதழ்கள் வழங்குதல்.

3) இதர தகுதிகள் சமமாக இருக்கும் போது அறுவைச் சிகிச்சை மேற்கொண்டோரின் குழந்தைகளுக்கு மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, விவசாயக் கல்வி, இதர தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றில் முன்னுரிமை வழங்குதல்.

4) குடும்ப நல வழி மேற்கொண்டோர்க்கென மருத்துவமனைகளில் தனிப் புற நோயாளிகள் பிரிவு, தனி வார்டுகள் ஏற்படுத்தித் தருதல்.



159887

# ஆசைக்கு ஓர் உயிர்

கே.ஜி. இராதாமணாளன்

## காட்சி 20

[முத்து தன் சோக வரலாற்றை வேதாசலமிடமும் சிதம்பரத்திடமும் கூறுகிறான்......கடந்த கால நிகழ்ச்சிகள்......]

இருப்போர் : பாக்கியம், சிற்றப்பா.

[சிற்றப்பாவிடம் பாக்கியம் தன் காதலைப் பற்றி ஓரளவு சொல்லி முடித்த நிலையில் காட்சி ஆரம்பமாகிறது.]

பாக் : இதுதான் சித்தப்பா—எங்க கதை! அவரு பேரு முத்து! நாங்க கொஞ்ச நாளா பழகிக்கிட்டு வர்ரோம்! அவரெ நானும்—என்னை அவரும் புரிஞ்சிக்கிட்டோம்! ஒருத்தரெ ஒருத்தர் விரும்புகிறோம்! அவரையே நான் திருமணம் செய்து கொள்ள—நீங்க ஒப்புக்கனும்—மறுக்கக் கூடாது!

சித் : நான் ஏம்மா மறுக்கப் போறேன்?......

பாக் : உண்மையாகத்தான் சொல்றிங்களா?

சித் : உனக்கு எதுக்கு இந்தச் சந்தேகம்—மக கிட்டப் போயா பொய் சொல்லப் போறேன்! எனக்குப் பிடிக்கலேன்னா—வேண்டாம், எனக்குப் பிடிக்கலேன்னு சொல்லிட்டுப் போறேன்! பாக்கியம், இதிலே ஒரு விஷயத்தெ கவனிக்கனும்......

பாக் : சொல்லுங்க சித்தப்பா!

சித் : ஜாதி விட்டு ஜாதி செய்துக்கிற கல்யாணமிருக்கே—அதிலே, ஆணுக்குச் சொத்திருந்தா பொண்ணும், பொண்ணுக்குச் சொத்திருந்தா ஆணும், ஒருத்தரெ ஒருத்தர் ஏமாத்திக்கிட்ட சம்பவங்க, ஒன்னு ரெண்டு எனக்குத் தெரியும்! அப்படி எதுவும் உனக்கு நடந்து விடக் கூடாது பாரு!

பாக் : அவரு அப்படிப் பட்டவர் இல்லே சித்தப்பா! தங்கமின்னா தங்கம்!

சித் : அப்படியிருக்கனுமின்னுதான் எனக்கு ஆசை! ஆனா எதுக்கும் நாம் முன் ஜாக்கிரதையா இருக்கனுமில்லையா? அதனாலே நான் சொல்லறதே, நீ செய்யனும்!

பாக் : சொல்லுங்க சித்தப்பா, செய்யறேன்! என் மனசு அறிஞ்சி நல்லது செய்யற உங்க மனசு நோக, நான் நடந்து கொள்வனா?

சித் : உன் சொத்தையெல்லாம் என் பேரு எழுதி வை—அதாவது, ஒப்புக்கு அப்படி ஒரு ஏற்பாடு! கொஞ்ச நாள் கழிச்சி, நீங்க எப்படி குடும்பம் நடத்தறிங்க இன்னு பாத்து, அதுக்கப்புறம் உன் பேருக்கே மாத்தி எழுதிக் கொடுத்துடறேன்!

பாக் : அதுக்கென்ன சித்தப்பா—எங்கே கையெழுத்துப் போடனும் சொல்லுங்க—போட்டுடறேன்!

சித் : அந்த முத்துவெ தங்கமின்னு சொன்னையே—நீ தாம்மா தங்கம்!

[அவர் உள்ளே சென்று சில காகிதங்களை எடுத்து வந்து, அவளிடம் காட்டுகிறார்].

பாக் : எழுதி தயாராக வச்சிருக்காப்பலே இருக்கே!

சித் : (சிரித்தவாறு) கொஞ்ச நாளாவே நீ போறது வர்ரதே கவனிச்சிக்கிட்டுத்தான் இருக்கேன்! இப்படி நீ ஒரு நாளைக்குக் கேட்பேன்னு, நான் எதிர்பார்த்தேன்! அப்படி மனசிலே தோனினதும், இப்படி ஒரு ஏற்பாடு செய்து வச்சேன்!

பாக் : சொல்லுங்க சித்தப்பா எங்கே கையெழுத்துப் போடனும் ?

[கடிதங்களைப் புரட்டி இடங்களை அவர் காட்ட, அவள் கையெழுத்துப் போடுகிறாள்.]

போதுமா சித்தப்பா ?

சித் : இது போதாது அம்மா, நாளைக்கு நீ சப் ரிஜீஸ்டார் ஆபீசுக்கு வர்ரனும்!

பாக் : அதுக்கென்ன வர்ரேன்! சித்தப்பா?

சித் : இன்னும் என்ன வேண்டும், சொல்லம்மா!

பாக் : (தயக்கம் கலந்த மகிழ்ச்சியோடு) அப்போ எங்க கல்யாணத்துக்கு, முழு சம்மதம் கொடுத்திட்டிங்க இல்லே?

சித் : உனக்கு இன்னுமா சந்தேகம்?

பாக் : சந்தேகமில்லே சித்தப்பா—சும்மா அப்படிக் கேட்டேன்!

[அவள் நாணத்தோடு சிரிக்கிறாள்.]

சித் : நீ எனக்கு எவ்வளவு உபகாரம் செய்திருக்கே தெரியுமா? நம்மபோல அய்யங்கார் ஆத்துங்கள்ளே, எத்தனை பெண்ணுங்க வளர்ந்து நிக்கறாங்க தெரியுமா, கல்யாணத்துக்கு? அவளுகளெ பெத்த தாயும் தொகப்ப னும் படற மனக் கஷ்டத்தெ, சொல்லி மாளாது! பைய னுங்க இருக்கிற வீடு வீடா, ஜாதகத்தைக் தூக்கிக் கிட்டு, ஏறி இறங்குவாங்க! "இப்படிச் சீர் செய்வையா? இவ்வளவு வர தட்சிணை தருவையா?" இன்னு கேட் பாங்க! தங்க செயின் போட்ட கடிகாரம், ஸ்கூட்டரோ மோட்டார் சைகிளோ--நினைச்சதெ எல்லாம் கேட்பாங்க! கொடுக்க முடியறதா எல்லோராலும்? ஏக்கப் பெரு மூச்சுதான் விட முடியும், எங்கேயிருந்து பொண்ணுக்குப் புருஷனெ வாங்க முடியும்?

பாக் : ஆமாம் சித்தப்பா, பக்கத்துத் தெருவு பரி மளாவுக்குப் பார்க்கிற இடமெல்லாம் இப்படித்தான் தவறிப் போகுதாம்!

சித் : தவறது என்னம்மா, தர முடிஞ்சாத்தானே புள்ளெ வீட்டார் கேட்கிறதெ! ஐயாயிரம், பத்தாயிரம் வாய் கூசாமெ கேட்கிறாங்களாம்! அந்தப் பஞ்சாங்கத்து அய்யர் உயிரெ வித்தாக் கூட அவ்வளவு தேராதே!

பாக் : கேட்கச்சே பரிதாபமா இருக்கு, சித்தப்பா!

சித் : அந்தப் பொண்ணே பார்க்கச்சே, எனக்குக் கண் கலங்கிடுது! மக்குப் பொண்ணு—அப்பா அம்மா வையே நம்பிக் கிட்டு, வூட்டுக் குள்ளேயே இருக்கிறா! ......நானும் பயந்தது உண்டு! நம்ப பாக்கியத்துக்காக எத்தனை வூடு தேடி ஓடனுமோ, ஜாதகத்தைத் தூக்கிக் கிட்டு எவன் எதிரே போய் நிக்கனுமோ இன்னு! எனக் குத் துளி கஷ்டத்தையும் வைக்காமே—நீயே ஒருத்தனெ தேடிக் கிட்டே!

[நாணத்தோடு அவள் தலை குனிய......]

எதுக்கு நீ வெட்கப்படறே, பாக்கியம்! இது நவ நாக ரிகக் காலம்--இப்படித்தான் நடந்துக்கனும்! சினிமா விலே பார்க்கிறோம் இல்லே—கதைகளிலே படிக்கிறோம் இல்லே— அப்படி செய்துட்டுப் போக வேண்டியது தானே!

பாக் : கல்யாணத்துக்கு நீங்க சரியின்னுட்டுங்க இன்னு சொன்னா—அவரு ரொம்பவும் சந்தோஷப்படு வார், சித்தப்பா!

சித் : சாதாரண சந்தோஷமா அது! என்னெ பத்தி அவன் என்ன எண்ணிக் கிட்டிருப்பான்? வைதீக பிராம ணன—ஜாதியின்னு வரிந்து கட்டிக் கிட்டு வருவாரு, சீர்த்திருத்தமின்னா சீறிப் பாய்வாரு, பத்தாம் பசலி, பழைய பஞ்சாங்கம், இப்படி ஒரு முடிவிலே அவன் இருந் திருப்பான்! "எங்கச் சித்தப்பா சம்மதிச்சுட்டாரு!" இன்னு நீ சொன்னா, அவன் மனசு எப்படியிருக்கும்! ஆனந்தத்திலே ஆடி ஆடி குதிக்கவே ஆரம்பிச்சுடுவான்!

பாக் : ஆமாம், சித்தப்பா—எனக்குக் கூடச் சந்தோ ஷத்திலே தரையிலே கால் நிக்க மாட்டேன்னுது! இப் பவே அவரெ பார்த்து, இந்த மகிழ்ச்சியான சமாசா ரத்தை சொல்லிடனும் போலத் தோனுது!

சித் : அவசரப்படாதே பாக்கியம்! இதிலே இன் னொரு சிக்கல் இருக்கு!

பாக் : (மகிழ்ச்சி குன்றி) சிக்கலா?

சித் : பயப்படாதே, சின்ன சிக்கல்தான்! அதெ என்னாலே சுலபத்திலே சமாளித்து விடமுடியும்! நம்ம ஜாதிக் காரனுங்க சும்மா இருப்பாங்களா? ஜாதி போச்சி, ஆச்சார அனுஷ்டானம் போச்சின்னு குதிப்பாங்க! சும்மா இருக்க மாட்டாங்க— இல்லாதது பொல்லாதது எல்லாம் பேசி, இந்தக் கல்யாணத்தை நிறுத்தப் பார்ப்பாங்க! அதனாலே......

பாக் : ஏன் சித்தப்பா தயங்கறிங்க?

சித் : (வருத்தம் மிகுந்த குரலில்) தயக்கமில்லேம்மா —நினைச்சா மனக் கவலையா இருக்கு!

பாக் : (ஏக்கத்தோடு) எங்க கல்யாணத்துக்குச் சம்ம திச்சுட்டு, இப்போ கவலையா இருக்குன்னு சொல்றிங் களே!

சித் : அது இல்லேம்மா, நான் சொல்லறது வேற! உன் தகப்பனார், அதுதான் என் அண்ணா, நீ சின்ன பொண்ணா இருக்கச்சே ஒரு நாள் சொன்னது ஞாப கத்துக்கு வந்தது! அவர் ஆசையெ நிறைவேற்ற முடி யலையே இன்ற கவலையாலே பேசமுடியலே! அவ்வ ளவுதான்!

பாக் : என் அப்பாவோட ஆசையா? அது என்ன சித்தப்பா?

சித் : உன் கல்யாணத்தைப் பத்தி சொன்னாரு அப்போ! தெரு முழுவதும் பந்தல் போடனும், பத்து ஊர் ஜனங்களும் திரண்டு வரனும், ஐந்து நாள் கல்யா ணம், ராத்திரியிலே வான வேடிக்கை, சதுர் கச்சேரி...... இப்படி உன் அப்பா சொன்னாரு! இப்போ அப்படி உங்க கல்யாணத்தே நடத்த முடியாதே!

பாக் : நம்மகிட்டேத்தான் பணமிருக்கே, ஏன் அப்படி நடத்த முடியாது?

சித் : பணத்தெ பத்தி இல்லேம்மா! நம்ம ஜாதிக் காரங்களைப் பத்தி சொன்னனே—எதிர்ப்பாங்க, கலகம் செய்வாங்க இன்னு—அந்தப் பயம் தான்! உம்! அதுக்கு வேற வழி வச்சுக்கிட்டிருக்கேன்!

பாக் : என்ன வழி?

சித் : இரகசியமா ரிஜிஸ்டர் ஆபீசுக்கு உங்களெ கூட்டிக் கிட்டுப் போய், கல்யாணம் செய்து வைத்துடப் போறேன்!

பாக் : (திருப்தியோடு) போதும் சித்தப்பா, அது போதும்!

சித் : அப்படிக் கல்யாணம் நடந்தா, ரெண்டு மூணு நாளைக்குச் சலசலப்பு இருக்கும், அப்புறம் சாதாரணமா போயிடும்! கணவனும் மனைவியுமா நீங்க, இந்த வூட் டிலேயே வந்து இருக்கலாம்!......கொஞ்சம் இரும்மா...

[உள்ளே சென்று, அவர் பஞ்சாங்கம் எடுத்து வருகிறார்]

பசக் : பஞ்சாங்கமா சித்தப்பா ?

[அவர் பதில் சொல்லாமல் பஞ்சாங்கத்தைப் புரட்டிப் பார்த்து விட்டு...]

சித் : தை மாசம் 10 ஆம் தேதி வெள்ளிக் கிழமை, திவ்வியமான நாள்! அன்னிக்கே உங்க கல்யாணத்தெ வச்சுக்கலாம்!

பாக் : (மகிழ்ச்சிப் பெருக்கோடு) தை மாசம்...

சித் : 10 ஆம் தேதி வெள்ளிக் கிழமை!

பாக் : (குழந்தை போன்ற குதூகலத்தோடு) சரி சித்தப்பா—நான் கொஞ்சம் பக்கத்துத் தெரு வரைக்கும் போயிட்டு வந்துடறேன்!

சித் : போயிவாம்மா!

[அவள் ஆனந்தத்தோடு அங்கிருந்து, செல்கிறாள். விறைப்போடு அவளைப் பார்த்தவாறு, அவர் நிற்கிறார்.]

— காட்சி மாறுகிறது —



# TO BE OR NOT TO BE

Dr. BALRAM JAKHAR
Speaker, Lok Sabha.

*(Inaugural address of Dr. Balram Jakhar, Speaker, Lok Sabha, who inaugurated the first Conference of Tamil Nadu Legislators on problems of population and Development, held at Rajaji Hall, Madras on 30-8-1981)*

Honourable Chief Minister Mr. M. G. Ramachandran, Hon. Mr. Rajaram, Speaker, Tamilnadu Legislative Assembly, Hon. Dr. Hande, Health Minster, Hon. Mr. Muthuswamy, Transport Minister, Mr. Haja Shareef, Leader of the Congress Party, Ladies and Gentleman, 'Vanakkam'.

I am very happy to be here to meet my brothers and sisters to day. It gives me great pleasure to see that very sincere and successful efforts are being made to promote family welfare programme. It is heartening to note that awareness amongst the masses is being created by seeking people's co-operation. A planned thing is always better—much more a planned family. The co-operation and concerted efforts is sure to bring increasing success to the enlightened people of Tamilnadu who have risen to the occasion and caught the bull by the horn. But I felt sorry when Mr. Rajaram referred to the disincentive offered to the Tamilnadu Government by cutting down two seats of Parliament. This should have been more, instead of cutting down and I hope that in future—at least better late than never — those States who multiply their number should be given some punishment. I congratulate all those engaged in this stupendous task of nation building and expect that these efforts will continue with greater zeal and vigour to bring the growth of population to a normal level. Some perceptive States have established that with the present growth rate the world population might double by the end of this century. That will be catastrophic. Here is question 'to be or not be'. It is for you to find an answer. I think our posterity will ask "whether our leaders, fore fathers, and projectors did not have the capacity to think of us". Let us face the question 'to be or not to be'. Take the question. The direct effect will be that financial outlays on social services like education, health, housing, water supply, etc., will immensely increase thereby creating severe budgetary constraints. May I pose a question. There might be somebody who do not love children as such, they are just like flowers. It is only when they grow up in our shadow that they imbibe what might be not liked by the people. But as long as they are kids they are loved. Now they are ill-equipped, ill-educated, undernourished and under-clothed. So, they should have better education, better medical facilities, better housing, better clothing, better health. We must have a world to be proud of or rejoiced but not to be scorn. That can only be done if we have the guts to face the situation and come up with the right answer at the right time. Under such conditions you can visualise the fate of the posterity. Nothing casts a darker shadow on the future of mankind than a phenomina of population explosion. The history of economic development of the advanced nations and the appalling conditions in which the people of the developing and the under-developed countries are living, corroborates the dictum that the population and development are co-related and inter connected. Un checked growth of population is a positive and sure blockade for development. It should, therefore, be our aim to see that this blockade is removed.

With limited land and inadequate resources at our disposal it would be difficult for us to cope up with the problems arising out of swelling population. This worldwide phenomina has come to stay as one of the major causes of the yawning gap between the rich and the poor everywhere. The under-developed and thedeveloping countries like India are one of the worst affected areas. The enormity of the problem can be gauged from the simple fact that we are adding to our population —one Australia every year, one United States every 15 years and one Soviet Union every 20 years.

The provisional results of the latest census operations have placed India's population at 683 millions. Between the period 1951—81 about 322 millions have been added to India's population. This has eroded the expected gains from the planned economic growth during these 30 years. The sixth plan document is replete with data indicating the fact of alarming population growth. The latest economic survey reveals that the Gross National Product has been growing at the rate of 3.6./. during 1950 -80 as compared 1.34./. during




the period 1900—1950. It is undoubtedly a great acheivement for the country to be ranked tenth in industrial production and fourth largest grain producer in the world. These, however, have to be viewed against the back ground that the population growth rate over 2%. has considerably eroded the per capita Gross National Product.

Our land area is less than 2½% of the world's total land area but we have more than 15%. of the world's population. What a contrast ?

How can thus, we catch up with the developing nations? Could you imagine the level of our prosperity today if we could have checked norms, growth of population over these years. We could have been amongst the most prosperous and developed nations of the world if we could have checked unbalanced growth of population I say with all emphasis at my command that those who denounced Family Planning efforts, for narrow selfish ends did a great dis-service to the poor and down-trodden in particular and the country in general.

The Sixth Plan rightly reiterated the Government's resolve to implement the Family Planning Progammes on a voluntary basis. It is sought to interweave it into the entire fabric of developmental effort. This is important because higher life expectancy, increased literacy and better standards of living exert a definite influence on the rate of popuation. This has been the experience of the developed countries which have passed from high birth and death rates to low one. The problems of excessive population can no doubt be solved through legislative measures, but legislation is neither social education nor a substitute for motivated public opinion to highlight the impending dangers. I feel that motivation for population control must emanate from the people themselves because it is basically their interest which is involved. Motivation for active participation in family welfare programmes which is our national policy should be by persuasion. And, in this the legislators, political and social workers and voluntary organisations who feel the pulse of the people can play a pivotal persuasive measures urging the people's to voluntarily accept small families as a norm for the future when emanating from the people's representatives, with all sincerity of purpose, I repeat SINCERITY OF PURPOSE, will surely have the desired results. Here lies the happiness and salvation of masses of this poor country having rich heritage of moral values.

We must, therefore, make vigorous efforts to promote Family Planning for ensuring a decisive decline in fertility. This important matter was debated in Parliament also. I am glad to say that all sections of the House rightly visualisea the gravity of impending dangers of population growth. I feel that there should be national consensus on a such vital issue. This is possible only when all the political parties sincerely strike and work for it. I would like such an atmosphere to be created all over the country, that not a solitary dissenting voice heard against the Family Welfare Programme. Then and then alone we can give some positive form and meaning to the hopes and aspirations of coming generation. Otherwise we shall be doing unimaginable harm and a great dis—service to the nation as a whole besides playing havoc with posterity. Realistic national programmes for the people, and by the people, should come up and be sincerely implemented at all levels. With these words I would like to wish you all success in your mission. Thank you very much.

—



# Family Welfare Programme is An Intrinsic Part of our Total Development

*Thiru. SAT PAUL MITTAL M.P.,*
*Chairman, Indian Association of Parlimentarians for Problems of Population and Development.*

**(Speech delivered by Thiru Sat Paul Mittal, M.P. in the First Conference of Tamil Nadu Legislators on Problems of Population and Devlopment held on 30-8-1981 at Rajaji Hall, Madras)**

Honourable Speaker of Lok Sabha, Honourable Chief Minister, Hon'ble Speaker, Tamil Nadu Legislative Assembly, Hon'ble Health Minister, Leaders of Opposition Parties and Groups, legislators from Tamil Nadu, Members of the Indian Association of Parliamentarians for Problems of Population and Development, distinguished guests friends and colleagues :

*I offer to you my sincere greetings* on the occasion of the first State-level Conference of the Indian Association of Parliamentarian for Problems of Population and Development in the historic city of Madras. This city is steeped in sweetness and light. It has the best of the rich Indian culture and it has made notable contribution to the nation's March towards prosperity. We have today gathered here to give momentum to a vital movement in which the State of Tamil Nadu has given the lead to many other States. I am reffering to the programme of population control in all its dimensions, in particular in the context of improving the quality of life of our people.

*I am extremely grateful to you,* Honourable Speaker, Lok Sabha, that you have in the midst of your heavy engagements, spared the time to inaugrate this Conference. I am equally indebted to the Hon'ble *Chief* Minister who has so graciously agreed to preside over the conference. I am grateful to the speaker of Tamil Nadu Assembly who very readily agreed to jointly convene this Conference and to deliver the valedictory address. Dr. H. V. Hande, the Health Minister of Tamil Nadu, has all along been extending to us full cooperation. To you, all fellow delegates, I extend a hearty welcome.

This Association is a non-party voluntary organisation which endevours to involve interested Parliamentarians. Here it means all elected represensentatives right from the National level to the grass routes of the village level. cutting across party affiliations, in the outstanding challenge of the alarming rise in Population in India. This Association works in close co-operation with UNFPA, an agency of the United Nations and aims to mobilise the masses of our people throuh their elected representatives,to volutarily accepting the small family *norm* to sustain the quality of human life. As you all know, the First National Conference of the IAPPD took place in New Delhi, on 25th May 1981. It was our good fortune that this conference was presided by your good self and was inaugurated by the esteemed Prime Minister, Mrs. Indira Gandhi. Her presence with us was a measure of the importance that the Government of India at the highest level and here the Chief Minister, who is the highest level (and the people in general ) accord to the family planning programme. In her speech she highlighted in particular, the national character of the Programme I quote from her address :

"There is talk of the desirability of a national consensus on *basic problems.* If there is any one issue on which a national consensus is most urgent, surely it is family planning.

I am glad that some leaders of political parties as well as major figures in this field of national life have recently endorsed a statement on the importance of a national consensus on family planning We are always receptive to new ideas and suggestions. Let us get together for consultations. Can we not agree on incentives and disincentives, on effective schemes and the best way in which to reach the people? I take this opportunity to urge all political parties and groups to place family planning above sectional *politics and to recognise* it as one of our *foremost* national priorities, demanding the wholehearted allegiance and cooperation of all. Population is a human problem, it is an issue of the quality of life."

The Hon'ble Speaker of lok Sabha, Dr. Balram Jakhar, presided over the New Delhi Conference. His presence, at this conference further strengthened the all-party character of the programme. I quote from his address :

195887

# We want Freedom and Decentralisation in the matter of Family Planning

Dr. H.V. HANDE
MINISTER FOR HEALTH AND FAMILY WELFARE

**(Speech made by Dr. H. V. Hande, Hon'ble Minister for Health, Government of Tamil Nadu at the 7-th Conference of the Central Council of Health and the Central Family Welfare Council at New Delhi)**

Mr. Chairman and my distinguished colleagues and ladies and gentlemen.

The process of implementation of the National commitment of Health for All by the year 2000 A. D. will have to proceed with speed and vigour and progress monitered from time to time. Monitoring groups consisting of administrators, public health and medical experts of the Central and State organisations may be constituted to periodically review the progress in the mode of Health and Family Welfare.

The task between health human development and economic development is wellknown. Desirable objectives under Health Policy have been indicated. To bring all these within the realm of the possible massive financial and other inputs are required. If there is a constraint on resources then it will be desirable to invest in the schemes with higher priority with maximum returns in terms of better health. This conference may indicate those schemes which need to be taken up as centrally sponsored schemes and the States may arrange the schemes in the order of priority for the allocation of limited resources.

Once the policy directions are finalised and budgetory sanctions are accorded by the Government of India in the case of centrally sponsored schemes decision regarding the implementation may be decentralised down the line in order to expedite the process of implementation. In other words we want freedom and decentralisation in the matter of F. P. work not only at the state level but also further down viz. the district level.

The Government decision to link 8% of the Central Plan assistance with performance and success in F. P. and welfare incorporated in the population resolution of April, 1976 as well as in the Statement of Policy on F. P. announced in June 1977 has not been implemented so far. This is unfortunate.

The draft on medical education policy seeks to make certain important policy changes which I feel will seriously erode the authority of the State which it is exercising at present. I agree that the existing medical educational system should be reoriented in such a manner that it meets the health needs of the country. This can well be achieved by close and continuous coordination between the Central and the State Governments, the Universities and the medical institutions. The proposed Health Education Commission is sought to be given a wide range of powers and responsibilities which in my view do not conform to the constitutional provisions. I consider that it is enough if a high powered coordination committee to attend to the much needed coordination between the Central and the State Governments the Universities and the medical institutions is constituted.

Tamil Nadu has done exceedingly well in F. P. programmes. Our birth rate is only 28 compared to the 37.1 per thousand. Our population escalation is 17% for the decade as against the national average of 24%. What is the appreciation we got from the Centre? I mean the fiscal appreciation. In the matter of devolution of funds in fact we lose the allotment from the Finance Commission because 20% is on the basis of backwardness which is measured on the basis of per capita income which is slightly elevated on account of effective check on population. We must have a F. P. Advisory Board consisting of a few Ministers. Now only a few executives cook up some plan and push it down the gallets of States. These executives have no contact with the masses. It is we who are in touch with their problems and so the type of Advisory Board that I suggest must be formulated. Even the plan of hospitals is being sent to us by these executives at the Centre and if we propose to make any variations we are not given any grant.



Printed and published by Dr. ERNEST J. DAVID, M.B.B.S., Director of Medical Services and Family Welfare at No. 49. Pantheon Road, Madras 600 008 — State Family Welfare Press, 79/81, Anna Salai, Madras-600 006
Editor: K. G. RADHAMANALAN Assistant Editor: S. MUTHURAMALINGAM

